பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00


சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 11 சனிக்கிழமை (23-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:90



வவுனியா விமானப்படைத் தளத்தில் வந்திறங்கிய நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க்.



ஓமந்தையில் அமைச்சர்கள் மாரப்பன, ஜயலத் ஜயவர்த்தன ஆகியோருடன் பிரதமர்.



அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் இராணுவத்தின் பிரதம அதிகாரியான லெப்.ஜெனரல் றொஹான் தளுவத்த.

# இன்று நள்ளிரவு முதல்

# நிரந்தர போர் நிறுத்தம்!

## நோர்வே அரசு பிரகடனம்

ஒஸ்லோ,பெப்ரவரி23

**ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிரந்தர யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையை (Memorandum of understanding) இருதரப்புகளும் ஏற்றுக்கொண்டு, அதில் கைச்சாத்திட்டிருப்பதாக நோர்வே அரசு அறிவித்திருக்கிறது.**

**இதன்படி, நிரந்தர யுத்தநிறுத்தம் இன்று நள்ளிரவு முதல் (24 ஆம் திகதி அதிகாலை முதல்) அமுலுக்கு வரவிருப்பதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றஸன் நேற்று ஒஸ்லோவில் விடுத்த உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**



யுத்தநிறுத்தம் அமுலுக்கு வருவது பற்றிய அறிவிப்பை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றஸன் நேற்று வெள்ளிக்கிழமை ஒஸ்லோவில் வெளியிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த இந்த அறிவிப்பு வெளி வருவதற்கான நடவடிக்கைகள் நேற்று வவுனியாவில் வைபவ ரீதியாக நடந்தன.

அரசுத்தரப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரதி நேற்று நோர்வேத் தூதர் ஜோன் வெஸ் பேர்க்கிடம் கையளிக்கப்பட்டது. பிரதமர் விக்கிரமசிங்கவே அதனைத் தூதரிடம் கையளித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒப்பமிட்ட உடன்படிக்கையின் பிரதி நேற்றுமுன்தினமே தூதர் வெஸ்பேர்க்கிடம் கையளிக்கப்பட்டது தெரிந்ததே.

இருதரப்புகளும் ஒப்பமிட்ட உடன்படிக்கையின் பிரதிகள் தமது கைக் குக் கிடைத்ததை அடுத்து தூதர் வெஸ்பேர்க், அது குறித்து நேற்று பிற்பகல் நோர்வே அரசுக்கு தெரியப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வருவது தொடர்பான பிரகடனம் ஒஸ்லோவில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்றுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



நோர்வே தயாரித்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒப்பமிடும் காட்சியை நேற்று இந்தியத் தொலைக்காட்சியான தூரதர்ஷன் உட்பட பல வெளிநாட்டு ஒளிபரப்புச் சேவைகளில் காண்பிக்கப்பட்டது.

வன்னியில் தலைவர் பிரபாகரன் உடன்படிக்கையில் ஒப்பமிட்ட காட்சி அடங்கிய ஒளி நாடா லண்டனில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஒரு காட்சியையே மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள். (ஐ)

### புரிந்துணர்வு உடன்படிக்கை

# அரசமைப்புக்கு முரணான செயல்; ஜனாதிபதி அதிர்ச்சி! கவலை!!

கொழும்பு,பெப்.23

தேசிய முக்கியத்துவம்வாய்ந்த உடன்பாட்டில் ஜனாதிபதியின் ஒப்பம் பெறப்படவேண்டும் என்ற அரசமைப்பின் விதிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலட்சியம் செய்துவிட்டார்.

- இவ்வாறு கவலை வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தார். அந்த அறிக்கையிலேயே ஜனாதிபதியின் கவலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பாகப் பிரதமர் கடந்த புதன்கிழமை மாலை 5 மணிமுதல் இரண்டரை மணிநேரம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினார்.

இந்த உடன்படிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கைச்சாத்திட்டுவிட்டார் என்றும், தாமும் அதில் கைச்சாத்திட விரும்புவதாகவும் பிரதமர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தலைவர் கைச்சாத்திட்ட பின்னர் அதில் தானும் கைச்சாத்திட சிலமணிநேர அவகாசம் இருக்கையிலேயே உடன்பாடு குறித்து ஜனாதிபதிக்கு பிரதமர் விளக்கமளித்துள்ளார். இதனால் ஜனாதிபதி அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளார்.

ஜனாதிபதி என்ற வகையிலும் அரசாங்கம் மற்றும் அமைச்சரவையின் நிறைவேற்று அதிகாரி என்ற வகையிலும் யுத்தம், நாட்டின் பாதுகாப்புப் போன்ற விடயங்களில் அரசமைப்பு மூலம் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்து பிரதமருக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு இறைமை சம்பந்தப்பட்ட விடயங்கள் அடங்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் அரசமைப்பின் பிரிவுகளின் பிரகாரம் ஜனாதிபதியே கைச்சாத்திடவேண்டும். இந்த விடயத்தில் பிரதமர் அலட்சியமாகச் செயற்பட்டுள்ளார்.

அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்துக்கு உடன்பாடு குறித்து தகவல் கொடுக்காமல்விட்டமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் போராட்டத்தில் ஒரு வரலாற்றுத் திருப்பம்!

### போர்நிறுத்தம் குறித்து பாலசிங்கம்

லண்டன்,பெப்.23

இன்று நள்ளிரவு அமுலுக்கு வர இருக்கும் போர்நிறுத்தம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு வரலாற்றுத் திருப்பத்தைக் குறித்து நிற்கிறது. வேறு விதமாகச் சொல்வதானால் இந்தப் போர்நிறுத்த உடன்பாடு சமாதானப் பாதைக்கு இடப்பட்ட ஓர் உறுதியான அத்திபாரம் எனலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.

நிரந்தரப் போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வருவது குறித்து அவர் நேற்று லண்டன் ஐ.பி.சி. வானொலிக்குப் பேட்டியளித்தார்.

அப்பேட்டியில் பாலசிங்கம் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

இந்தப் போர்நிறுத்த உடன்பாட்டில் பல்வேறு அம்சங்கள் அடங்கியுள்ளன. இந்த உடன்பாடு நடைமுறைக்கு வரும் இன்றையநாளில் இருந்து தரை, கடல், ஆகாய மார்க்கமான சகல போர் நடவடிக்கைகளுக்கும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.23

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவாகியுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டைக் கண்டித்து கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சிஹல உறுமயவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் பிரதமர் ரணிலின் அரசுக்கு எதிராகக் கோசங்களை எழுப்பினர்.

இந்த உடன்பாட்டுக்கு எதிராக சிஹல உறுமய உட்பட தீவிரவாத அமைப்புக்கள் இணைந்து பெரும் பாதயாத்திரை ஒன்றை அடுத்தவாரம் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளன.

(ஐ-3)



தாம் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வவுனியா அரச செயலகத்தில் வைத்து நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க்கிடம் கையளித்த காட்சி.

# மருத்துவ பீட பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இவ்வாண்டுப் பரீட்சை முடி வுகள் நேற்று வெளியாகின. பரீட்சை முடிவுகளின்படி 49 பேர் டாக்டர்களாக வெளியேறியுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

**இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு)**

செல்வி கே.காவேரி, செல்வி ஏ.நிருபா, செல்வி எஸ்.பத்மினி.

**இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு)**

ரி.கோபிசங்கர், ரி.ஹிட்சின்சன், செல்வி கே.சுவாமிநாதன், ஏ.கெனத், வி.புவனராஜ், கே.ராஜன், செல்வி எஸ்.பாலசுப்பிரமணியம், எஸ்.சியாமளன், செல்வி எஸ்.சோபிதா, செல்வி பி.சுதர்சினி, கே.தெய்வேந்திரகுமார், வி.தாமோதரன், செல்வி ரி.கமலநாதன், திருமதி வி.வானதி, செல்வி சி.வாசுகி, ஆர்.றோஹான்குமார்.

**சித்தி**

கே.அகிலன், எஸ்.கிரிதரன், திருமதி என்.யசித்தா, செல்வி ஜே.கிருஷ்ணபிள்ளை, செல்வி வி.கயல்விழி, கே.பாரதன், ஆர்.பிரதாபன், பி.பிரதீபன், கே.ரமேஷ், திருமதி ஏ.ரேவதி, எம்.குகேஷன், வி.செல்வவேல், எஸ்.சிவச்செல்வன், எஸ்.டேமியன் தவப்பிரகாஷ், கே.உமாசங்கர், எம்.உமாசங்கர், எஸ்.வரதன், செல்வி வி.கணேசலிங்கம், ஆர்.விஷ்ணு மோகன், செல்வி ஜி.யசோதரா, செல்வி ஏ.எம்.ஞானப்பிரகாசம், எஸ். அங்ரகுமாரன், செல்வி என்.ஜானகி, ஆர்.தனராஜ், டி.முகுந்தன், செல்வி எஸ்.சிவரதி, திருமதி ரி. மணிவண்ணன், கே.மணிவண்ணன், செல்வி எஸ் தமிழ்ச்செல்வி, கே.தயாளன்.

முதல் தரத்தில் இந்த முறை எவருமே சித்திபெறவில்லை.(ஐ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையமும் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் இணைந்து 50ஆவது ஆண்டு நிறைவு பொன் விழாவை ஒட்டி கோண்டாவிலில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் இணுவில் அண்ணா வி.கவும் மானிப்பாய் ஆனந்தா வி.கவும் மோதுகின்றன. (ஐ-3)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடத்தப்பட்டுவரும் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ 15 வயதுப் பிரிவு - அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரி எதிர் கோப்பாய் சரவணபவானந்தா வி.

★ 15 வயதுப் பிரிவு - புத்தூர் சோமாஸ்கந்தா எதிர் கோப்பாய் மகா வித்தியாலயம்.

★ 17 வயதுப் பிரிவு - புத்தூர் சோமாஸ்கந்தா எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

★ 19 வயதுப் பிரிவு - கோப்பாய் மகா வித்தியாலயம் எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.(ஐ-180)

★ ★ ★

இளவாலை றோ.க.த.க.ஆண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி அ.இம்மனுவேல் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும் சிறப்பு விருந்தினராக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-48)


## சுடர் ஒளி

இந்தவார இதழில்....

☆ மகேஸ்வரன் Vs ஜயலத்
பிரதமருக்கு புதிய சிக்கல்
அமைச்சர்களிடையே உக்கிரமாகும் பனிப்போர்.

☆ போராளி டாக்டர்களின்
போர்க்காலப் பணி!
(வன்னிக் கட்டுரை)

☆ அவுருத்தவை மாட்டிவிட்ட
அதிரடி நடவடிக்கைகள்!

☆ கிழக்கில் வரலாறு காணாத
'பொங்கு தமிழ்' நிகழ்வு

☆ சுதந்திரமாக நடமாடும் உரிமை
வடக்கே கலக்குது சிவாது வயிற்றை

☆ காணிக் கொள்வனவில் ஊழல்:
பிரதேச சபை உறுப்பினர்கள் குமுறல்
சுன்னாகத்தில் போர்க்கொடி

☆ வடபகுதி கப்பல் பயணிகள் மீது கெடுபிடி;
மாறாதா இவர்கள் தலைவிதி

மற்றும் சிறுகதை, விளையாட்டு, சிறுவர் பகுதி, பித்தன் பதில்கள், இலவச மருத்துவ ஆலோசனை, சினிமா உட்பட சுவையான அம்சங்கள்

(C/20858)


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்பலவாணர் தனலட்சுமி

காரைநகர், பெரியமணலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலவாணர் தனலட்சுமி (21.02.2002) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலவாணரின் அன்பு மனைவியும், தவமணிதேவி, சிவகௌரி ஆகியோரின் அன்புத் தயாரும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நடராசா, தனபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைச்செல்வி, சுரேந்தர் (கொழும்பு), சுதாகர், கோபிநாத் (கொழும்பு), தவரூபன், சிவரூபன், காலஞ்சென்ற சாந்தரூபன், அருள்ரூபன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2002) சனிக்கிழமை 4 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

*77/37, புகுளிமாவத்தை,*
*மோதரமட்டக்குளி, கொழும்பு - 15.*
*ஐயனார் கோவிலடி லேன்,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (1043)

தகவல்:
சுதாகர் (பேரன்)

# புலிகளின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க நவீன ஆயுதங்கள், வள்ளங்கள் தேவை!

## கடற்படைத் தளபதி பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு,பெப்.23

அதிவேக வள்ளங்களும் நவீன தாக்குதல் ஆயுதங்களும் கடற்படைக்கு உடனடியாகத் தேவை.

- இவ்வாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் கடல் வழியாக ஆயுதங்கள் கொண்டு வருவதற்கு எதிராகத் தாக்குதல் நடத்த இவை தேவை என்று அவர் கூறுகிறார்.

புலிகள் இயக்கம் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்கள் நடத்துகின்றது. இத்தாக்குதல்களுக்கு முகங்கொடுக்கத் தேவையான ஆயுதங்களும், அதிவேக வள்ளங்களும் கடந்த காலங்களில் கடற்படைக்கு வழங்கப்படவில்லை என்று கடற்படைத் தளபதி பிரதமரிடம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

முப்படைத் தளபதிகளுடன் பிரதமர் ரணில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டடத்தில் விசேட சந்திப்பொன்றை நிகழ்த்தினார். அப்பொழுதே கடற்படைத் தளபதி மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

முல்லைத்தீவுக் கடலில் இடம்பெற்ற கடற்படை, விடுதலைப் புலிகள் மோதல் குறித்து பிரதமருக்கு விவரங்களைத் தெரிவிக்கவே இச்சந்திப்பு நிகழ்ந்தது.

இம்மோதலுக்குப் புலிகள் மி.மீ. 30 நவீன ஆயுதங்களுடனான அதிவேக வள்ளங்களைப் பயன்படுத்தினர். கடற்படையினர் மி.மீ.23 ஆயுதங்களுடனான வள்ளங்களைக் கொண்டு பதில் தாக்குதல் நடத்துவது இயலாதிருக்கிறது என்று கடற்படைத் தளபதி பிரதமரிடம் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது. (ஐ)

# விடுதலைப் போராட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது.

எல்லைப் பிரதேசங்களில் பாது காப்பு அரண்களில் உள்ள அரச படைகளும் புலிப்படை வீரர்களும் குறைந்தது 400 மீற்றர் இடைவெளி விட்டு தத்தமது நிலைகளில் நிலைகொண்டு நிற்பர். எனினும் இந்த உடன்பாட்டு விதிகளின்படி - ஒரு கால அட்டவணையின் கீழ் - எமது போராளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

நெருங்கிய உறவினர்களைச் சந்திக்க விரும்பும் போராளிகள் தமது தளபதிகளின் அனுமதியுடன் 6 நாள்களுக்குள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் சென்று வரலாம்.

இன்றிலிருந்து ஒரு மாதத்தின் பின்னர் ஆயுதம் தரிக்காத போராளிகள் 50பேர் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் அனுமதிக்கப்படுவர். இரண்டுமாத காலத்தின் பின்னர் நூறு போராளிகளும் மூன்று மாத காலத்துக்கு பின்னர் சகல போராளிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்கப்படுவர்.

இதேபோல, இராணுவத்தினரும் இரண்டுமாத காலத்தின் பின்னர் கண்டி நெடுஞ்சாலை வழியாக வன்னி ஊடாக ஆயுதம் தரிக்காமல் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்குச்செல்ல அனுமதிக்கப்படுவர். இந்த உடன்பாட்டின் அடுத்த முக்கியமான அம்சம் தமிழர் தாயகத்தின் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க பல ஆக்கபூர்வமான நல்லெண்ண நடவடிக்கைகள் எடுப்பது ஆகும்.

உதாரணமாக இன்றிலிருந்து ஒரு மாதத்திற்கு கோயில்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்களில் நிலைகொண்டிருக்கும் அரச படைகள் அவ்விடங்களை விட்டு வெளியேறவேண்டும்.

அதேபோன்று பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் அங்கிருந்து படிப்படியாக வெளியேறி முகாம்களுக்குள் முடங்கவேண்டும்.

இந்த நடைமுறை நூற்று அறுபது நாள்களுக்குள் முடிவடையவேண்டும். அதேபோன்றுதான் இன்னும் இரு மாதங்களுக்குள் தமிழரின் நகரங்கள், பட்டணங்களில் சனத்தொகை நிறைந்த இடங்களில் நிறுவப்பட்டிருக்கும் தடைகள், காவலரண்கள் என்பன படிப்படியாக அகற்றப்படவேண்டும்.

அடுத்து, முக்கியமாக வடக்கிலும் தென் தமிழீழத்திலும் முக்கிய பாதைகள் பொதுசனப்போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்படும். இதில் குறிப்பாக கண்டி - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை இன்னும் ஒரு மாதத்துக்குள் முற்றாகத் திறந்துவிடப்படும். இதன்மூலம் முழு இலங்கையுடன் நீண்டகாலமாகத் துண்டிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணக் குடாநாடு வன்னியுடன் இணைந்து தென்னிலங்கைவரை இணைக்கப்படும்.

இது வன்னி, யாழ்ப்பாணம் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் சுதந்திரமான, இலகுவான, செலவு குறைந்த போக்குவரத்துக்கு வழிவகுக்கும்.

☆ *கேள்வி:-* இந்த ஒப்பந்தத்தில் எமது மக்களின் அன்றாடப் பிரச் சினைகள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். இது பற்றி சற்று விளக்கமாகத் தெரிவிக்கமுடியுமா?

✽ *பதில்:-* இந்த உடன்பாடு வெறும் அமைதிபேணும் ஒப்பந்தமாக மட்டுமன்றி, இதில் தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்சினைகளும், அவற்றுக்கான தீர்வுகளும் முக்கிய அம்சமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக இந்த உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் தான் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் மீன்பிடி மீதான தடைகள் தளர்த்தப்படும். இன்றிலிருந்து மூன்று மாதத்துக்குள் மீன்பிடி கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்படும்.

கரையோரமாக உள்ள இராணுவ, கடற்படைத் தளங்களை அண்டியுள்ள சில பகுதிகளைத் தவிர தமிழீழ கடற்பரப்பில் எமது மீனவ மக்கள் சுதந்திரமாகத் தொழில்செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

அடுத்ததாக இந்த உடன்பாடு நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து கட்டுப்பாடு விதிக்கப்பட்ட ஒரு சில பொருள்களைத் தவிர சகலவிதமான அத்தியாவசியப் பொருள்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு முழுமையாக அனுமதிக்கப்படும்.

டீசல், பெற்றோல், இரும்புக்கம்பி போன்ற பொருள்கள் மக்களின் கோரிக்கைக்கு ஏற்பவும், சந்தையின் தேவைக்கு ஏற்பவும் தாராளமாக அனுமதிக்கப்படும் என ஒப்பந்தத்தில் அரசாங்கம் உறுதியளித்திருக்கின்றது.

எனவே இந்த உடன்பாட்டைச் செய்துகொள்வதில் எமது இயக்கம் தமிழீழ மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும், வாழ்க்கைப் பிரச்சினைகளையும், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும் என்பதில் முக்கிய கவனமும் அக்கறையும் செலுத்தியிருக்கிறது என்பதை நீங்கள் கண்டுகொள்ளலாம்.

☆ *கேள்வி:-* பொ.ஐ.முன்னணி ஆட்சிக் காலத்தில் இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தம் இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைக்கு வராமல் தடையாக இருந்த காரணங்கள் எவை என்று கூறமுடியுமா?

✽ *பதில்:-* 1995ஆம் ஆண்டு சந்திரிகா அரசுடன் நடந்த பேச்சுக்களின்போது, தமிழ் மக்கள்மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை, மீன்பிடித்தடை, போக்குவரத்துத் தடை என்பன நீக்கப்படவேண்டும் என்பது பற்றி ஆறு மாதகாலமாகப் பேசினோம். தடைகள் எல்லாம் முற்றாக நீக்கப்பட்டுவிட்டன என்று சந்திரிகா எமக்கு அடிக்கடி கூறிவந்தார். ஆனால் உண்மையில் எந்த ஒரு தடையும் நீக்கப்படவில்லை. இப்படியாக இந்த ஏமாற்று வித்தை நீண்டகாலமாக நடந்தது. இறுதியில் இந்தப் பேச்சு முறிந்தமைக்குக் காரணமே சந்திரிகா அரசு எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இணங்காததுதான்.

ஆனால், இன்று ரணில் விக்கிரமசிங்கவின் அரசு கொடுத்தவாக்குறுதிகளை மெல்லமெல்ல - படிப்படியாக - நிறைவேற்றிவருகிறது. இப்போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இந்த வாக்குறுதிகள் உறுதியளிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் மறுத்தாலோ அல்லது இழுத்தடித்தாலோ சர்வதேச கண்காணிப்புக்குழுவுக்கு அதாவது சர்வதேச சமூகத்துக்கு அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும். ஆகவே இந்த உடன்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் வாக்குறுதிகள் படிப்படியாகவாவது நிறைவேற்றி, அமைதியும் நிறைவான வாழ்வும் ஏற்படும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

☆ *கேள்வி:-* இந்த ஒப்பந்தத்தில் கண்காணிப்புக் குழுபற்றி என்ன கூறப்பட்டிருக்கின்றது?

✽ *பதில்:-* சர்வதேச கண்காணிப்புக்குழு வெகுவிரைவில் அமைக்கப்படும். இந்தக் குழுவுக்கு நோர்வே அரசாங்கம் தலைமைவகிக்கும்.

அத்துடன் சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளின் அரசுகளும் பிரதிநிதிகளை அனுப்ப இணங்கி உள்ளன. யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்தக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும். அதற்கு வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவர் தலைவராக இருப்பார். அந்தக் குழுவில் புலிகள் தரப்பில் இருவரும் அரச தரப்பில் இருவருமாக மொத்தம் 5 பேர் அடங்குவர்.

இந்தக் குழு போர்நிறுத்த நடைமுறை ஒழுங்குகளைக் கண்காணிக்கும். மீறல்கள் ஏதாவது நடந்தால் அதுபற்றி விசாரித்துத் தீர்க்கும்.

☆ *கேள்வி:-* இந்த ஒப்பந்தம் ஏனைய ஆயுதக்குழுக்களின் நிலைப்பாடு குறித்து என்ன கருத்துக்களை வெளியிட்டிருக்கிறது என்று கூறமுடியுமா?

### தமிழ்க் குழுக்களின் ஆயுதக்களைவு

✽ *பதில்:-* இன்றிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய ஆயுதக் குழுக்கள் அனைத்தும் குறிப்பாக டக்ளஸின் ஈ.பி.டி.பி. குழுவினர் நிராயுதபாணிகளாக்கப்படுவர். இவர்கள் இராணுவத்தில் சேரப்போவதாகக் கேட்டிருக்கிறார்கள். ஆரம்பகாலத்திலிருந்தே இதனைச் செய்திருந்தால் இப்போது அந்த அமைப்பில் ஒருவர் கூட இருந்திருக்கமாட்டார்கள். இருந்தாலும் அவர்கள் இராணுவத்தில் சேரவிரும்பினால் சேரலாம் என்று நாங்கள் இணங்கியிருக்கிறோம். ஆனால் வடக்கு - கிழக்கில் அவர்கள் சேவைக்கு அமர்த்தப்படக்கூடாது என்று கூறியிருந்தோம். அதற்கு அரசு இணங்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் அது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இராணுவத்தில் இணையும் தமிழ ஆயுதக்குழு உறுப்பினர்கள் வடக்கு - கிழக்குக்கு அப்பால் தென்னிலங்கையில் சேவைக்கு அமர்த்தப்படுவர்.

☆ *கேள்வி:-* சிங்கள பௌத்த பேரினவாதிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் இந்த அரசினால் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளமுடியும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

✽ *பதில்:-* எமக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது இந்த சமாதான முயற்சி வெற்றியளிக்கும் என்று. ஏனெனில் ஒட்டுமொத்தமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களால் வரவேற்கப்பட்டதொரு நிகழ்ச்சி. சிங்கள மக்கள் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் சமாதான முயற்சிக்கான மனுவை வழங்கியிருக்கின்றார்கள். அத்துடன் சர்வதேச உலகமும் இதனைக் கண்காணித்து வருகிறது. சர்வதேச உலகத்தின் ஆதரவும் இதற்கு இருக்கிறது.

அதேவேளை, இந்த சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய பாரிய நிர்ப்பந்தமும் அரசுக்கு இருக்கிறது. நாடு பொருளாதார நிலையில் சீரழிந்து குட்டிச்சுவராகியிருக்கிறது. ஆகவே சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் இந்த சமாதான முயற்சிகளை எதிர்த்தால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் சர்வதேச உலகத்தின் ஆதரவை இழந்துவிடுவார்கள்.

இதனால் இந்த முயற்சி தடைப்படாமல் முன்னெடுக்க முடியும் என நாங்கள் நம்புகின்றோம்.

- இவ்வாறு பாலசிங்கம் தெரிவித்தார். (ஐ-4)

## தீவிரவாதிகள் விமானத்தைக் கடத்தியதை அடுத்து
# கொலம்பிய சமாதான முயற்சிகள் அனைத்தும் அடியோடு முறிந்தன!

பகோட்டா,பெப்.23

தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட 37 பயணிகளுடன் சென்ற விமானத்தை இடதுசாரித் தீவிரவாதிகள் கடத்தியதை அடுத்து அவர்களுடனான சமாதானப் பேச்சுக்களைக் கொலம்பிய அரசு முறித்துக் கொண்டுள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு அதிபர் அன்ரு பஸ்ரானா படைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை முறித்துக்கொண்டதாக அரசு அறிவித்த சில மணி நேரங்களில் கொலம்பிய விமானப்படை விமானங்கள் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில உள்ள அவர்களின் நிலைகள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் தீவிரவாதிகளின் நிலைகளை நோக்கி முன்னேறிவருவதாகவும் - இரு தரப்புகளுக்கும் இடையில் கடுஞ்சண்டை மூண்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

நேற்று மட்டும் போர்விமானங்களும், ஹெலிகளும் தீவிரவாதிகளின 85 நிலைகளைத் தாக்கி அழித்ததாக கொலம்பிய இராணுவத் தரப்பு தெரிவித்தது. மெடா பிரதேசத்தில் மட்டும 225 கிலோகிராம் குண்டுகள் வீசப்பட்டதாகவும் அவை கூறின.

அதிபர் பஸ்ரானாவின் இந்தப் போா முழக்கத்தின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளாக தீவிரவாதிகளுடன் நடத்தப்பட்டு வந்த சமாதானப் பேச்சுக்கள் முடிவுக்கு வந்துள்ளன. இதனால் 38 ஆண்டுகளாகத் தொடரும் உள்நாட்டு யுத்தம் மேலும் தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னதாக, நீவாவில் இருந்து 37 பயணிகளுடன் தலைநகர் பகோட்டாவுக்குப் புறப்பட்ட விமானத்தை நான்கு தீவிரவாதிகள் ஆயுத முனையில் கடத்தினர். எதிர்க்கட்சித் தலைவரும் செனட் உறுப்பினருமான ஜார்ஜ் கெகெம்மும் அவர்களில் அடங்கியிருந்தார்.


கடத்தப்பட்ட விமானம் ஹேறாவோ வீதியில் தரையிறக்கப்பட்ட பின்னர் அதனைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தும் கொலம்பியப் படையினர்.

தீவிரவாதிகள் விமானத்தை ஹேறாவோ புறநகர்ப் பகுதியில் உள்ள பிரதான வீதியில் தரை இறக்கினார்கள். அங்குவைத்து 29 பயணிகளை விடுவித்துவிட்டு எதிர்க்கட்சித் தலைவரையும் மேலும் சில பிரமுகர்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். இந்தச் சம்பவமே கொலம்பிய அரசு சமாதானப் பேச்சுக்களை அடியோடு முறித்துக்கொண்டு போர்ப் பிரகடனம் செய்ததற்குக் காரணம் என்று அரசுத் தரப்புப் பேச்சாளர் தெரிவித்தார். (ம)

## ஆபாசப்படம் தயாரித்த மூவர் சென்னையில் சிக்கினர்!

சென்னை.பெப்.23

சென்னையில் ஆபாசப்படம் தயாரித்த மூன்று பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக சில சினிமா நடிகர், நடிகைகள், தயாரிப்பாளர்கள் தேடப்பட்டு வருவதாக பொலீஸார் தெரிவித்தனர்.

மலையாள 'நீல'ப்படங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து திடீர் சோதனை நடத்திய பொலீஸார் இந்த மூன்று பேரையும் கைதுசெய்தனர்.

சுமார் பதினொரு நீலப் படச் சுருள்களும், மொழிபெயர்ப்புக்குப் பயன்படுத்தப்படும் கருவிகளும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மலையாளத் திரைப்படத் தயாரிப்பாளர் புருஷன் என்பவரையும் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் ராஜு" என்பவரையும் பொலீஸார் தேடிவருகின்றனர்.

சென்னையில் ஒதுக்குப்புறமாக உள்ள பல சிறிய திரையரங்குகளில் இவ்வாறாந சட்டவிரோதச் செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவற்றைத் தடுப்பதற்கு பொலீஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் சென்னை நகரப் பொலீஸ் ஆணையாளர் தெரிவித்தார். (ம)

## அமெ.இராணுவ ஹெலி பிலிப்பைன்ஸில் விபத்து

வாஷிங்ரன்,பெப்.23

அமெரிக்க இராணுவ ஹெலி ஒன்று தெற்கு பிலிப்பைன்ஸ் தீவான பஸிலானில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஹெலியில் பயணம் செய்த 12 அமெரிக்கப் படையினரும் உயிரிழந்துள்ளனர் என்று வாஷிங்ரன் அறிவித்துள்ளது.

பஸிலான் தீவில் இடம்பெற்றுவரும அமெரிக்க - பிலிப்பைன்ஸ் கூட்டு இராணுவப் பயிற்சிகளில் இணைந்து கொள்வதற்காக அமெரிக்கப் படையினர் சென்று கொண்டிருந்த சி.எச்.47 ரக ஹெலியே விபத்துக்குள்ளானது.

வடக்கு பஸிலான் தீவுக்கடலில் ஹெலி விபத்துக்குள்ளாகி வீழ்ந்ததாக பென்ரகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹெலி விபத்துக்குள்ளான இடத்தில் அமெரிக்க விமானங்கள் தேடுதல்களை மேற்கொண்டுள்ளன. ஆனால் எவரும் உயிர் பிழைத்திருக்கக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

உலக அரங்கில்

ஹெலி மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்ற கருத்தை பென்ரகன் அதிகாரிகள் - அடியோடு நிராகரித்துள்ளனர். (ம-ரி)

# மாவோயிஸ்டுக்களின் தாக்குதலில் நேபாளத்தில் 32 பொலீஸார் பலி!

காத்மண்டு,பெப்.23

நேபாளத்தில் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் முக்கிய பொலீஸ் நிலை ஒன்றின் மீது நடத்திய பெருந் தாக்குதலில் குறைந்தது 32 பொலீஸ் அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நேபாள அரசு நாட்டில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட சில மணி நேரங்களில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது பொலீஸாருக்கும் கிளர்ச்சியா ளர்களுக்கும் இடையில் நடந்த சண்டையில் நான்கு கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக நேபாள உள்துறை அமைச்சர் தேவேந்திரா ராஜ் கண்டல் தெரிவித்தார்.

தலைநகர் காத்மண்டுவுக்கு 250 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சித்தாள்பட்டி என்ற இடத்தில் அமைந்துள்ள இந்தப் பொலீஸ் நிலையில் தாக்குதல் இடம்பெற்ற சமயம் 85 பொலீஸார் கடமையில் இருந்தனர். சுமார் நான்கு மணி நேரம் இரு தரப்புக்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.


கடந்த ஞாயிற்றுக் கிழமை அச்ஹாம் மாகாணத்தில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பொலீஸாரின் சடலங்கள் சிதறிக் கிடப்பதை படத்தில் காணலாம். இந்தத் தாக்குதலில் 130க்கும் மேற்பட்டடோர் பலியாகியிருந்தனர்.

கடந்த ஒரு வார காலத்தில் இடம்பெற்ற கிளர்ச்சியாளர்களின் இரண்டாவது பெரும் தாக்குதல் இதுவாகும். கடந்த ஞாயிறன்று கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 130 பொலீஸார் மற்றும் படையினர் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இந்தத் தாக்குதலை அடுத்து அவசரமாகக் கூடிய நாடாளுமன்றம் 250 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நாட்டில் அவசரகால நிலையை பிரப்பிப்பது தொடர்பான பிரேரணையை நிறைவேற்றியது. இன்னும் மூன்று மாத காலத்துக்கு இந்த அவசரகால நிலை நடைமுறையில் இருக்கும்.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்காக இந்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினத்துக்கு மேலும் 1கோடி டொலர்களை ஒதுக்குவதற்கு நேபாள அரசு தீமானித்துள்ளது. புதிய ஒதுக்கீட்டு நிதியிலிருந்து இராணுவத்துக்கு நவீன ஆயுதங்கள், ஹெலிகள், துருப்புக்காவி வாகனங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

# கடத்தப்பட்ட பத்திரிகையாளர் கொல்லப்பட்டது உறுதியானது!

இஸ்லாமாபாத்,பெப்.23



பாகிஸ்தானில் கடந்த மாதம் கடத்தப்பட்ட அமெரிக்கப் பத்திரிகையாளரான டானியல் பேர்ல் தற்போது உயிருடன் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. பாகிஸ்தானிலுள்ள அமெரிகத் தூதரகத்துக்கு பேர்ல் கொல்லப்பட்டுவிட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று அமெரிக்க அரச திணைக்களம் நேற்றுமுன் தினம் அறிவித்துள்ளது.

பேர்ல் பணியாற்றிய 'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' பத்திரிகையும் அவர் கொல்லப்பட்டுவிட்டதை உறுதிப்படுத்தயுள்ளது. பாகிஸ்தான் பொலீஸ் அதிகாரிகள் பேர்ல் கொல்லப்பட்டதை தமக்கு உறுதிப்படுத்தியுள்ளதாக பத்திரிகை நிறுவனம் தெரிவித்துள்ளது.

பேர்ல் கொல்லப்பட்டுவிட்ட விடயம் சீனாவுக்கு விமானத்தில் சென்று கொண்டிருந்த சமயம் அதிபர் புஷ்ஷிக்குத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம)


நப்லஸில் உள்ள பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமையகம் அமைந்துள்ள கட்டடத்தை இஸ்ரேலியப் போர் விமானங்கள் தாக்கி சேதப்படுத்தின. தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களைப் பலஸ்தீன அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.

## எஜமானியைக் கொன்று வெட்டி 'சூப்' வைத்துக் குடித்த இளைஞன்
### நைஜீரியாவில் மிருகத்தனம்

லாகோஸ், பெப்.23

சம்பளத் தகராறு காரணமாக ஆத்திரமடைந்த ஒருவர் தனது எஜமானியைக் கொன்று அவரது சடலத்தை துண்டு துண்டாக்கி பின்னர் சமைத்து உண்ட அநாகரிகச் செயல் நைஜீரியாவில் இடம்பெற்றுள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில அங்கு ஒண்டோ மாகாணத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிறிஸ்ரியானா எலிஜா (வயது 40) என்ற பெண்ணின் பண்ணையில பணிபுரிந்த சலிபுகியூவோ (வயது 23) என்ற தொழிலாளியே இந்த அநாகரிகச் செயலைப் புரிந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சலிபுகினின் சம்பளக் கொடுப்பனவில் எலிஜாவுக்கும் அவருக்கும் தகராறு ஆரம்பமானது. அது உச்சத்தை அடைந்தபோது சலிபு தனது எஜமானியை மண்வெட்டியினால் வெட்டிக் கொன்றார்.

பின்னர் அவரது கை, கால்களைத் துண்டு துண்டாக்கி அதனை சூப் வைத்து அருந்தியதுடன் அந்த சூப்பை சக தொழிலாளர்களுக்கும் வழங்கினார். அதனை அருந்திய சக தொழிலாளர்கள் சந்தேகம் ஏற்பட்டு பொலீஸில் முறையிட்டனர் - என்று பொலீஸார் இச்சம்பவம் பற்றிக் கூறுகின்றனர்.

உடனடியாகப் பண்ணைக்கு விரைந்த பொலீஸார் நடத்திய தேடுதலில் எலிஜாவின் சடலத்தின் எஞ்சிய துண்டுகளை பண்ணையின் பல்வேறு இடங்களில் இருந்தும் கண்டெடுத்தனர்.

விசாரணைகளின்போது தனது எஜமானியைக் கொன்று சூப் வைத்துக் குடித்ததை சலிபு ஒப்புக்கொண்டுள்ளார். (ம)

## பஸ் விபத்தில் 50 பேர் பலி!

காத்மண்டு.பெப்.23

நேபாள நாட்டில் இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் அந்த பஸ்ஸில் பயணம் செய்த 50 பேரும் உயிரிழந்தனர்.

தலைநகர் காத்மண்டுவில் இருந்து தன்குடா என்ற இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸே விபத்துக்குள்ளானது. ஆற்றுப் பாலம் ஒன்றைக் கடக்க முற்பட்டபோது பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# துபாய் மன்னரின் மகன் விபத்தில் திடீர் மரணம்

ஐக்கிய அரபு எமிரேட் நாட்டின் பிரதமரும், துபாய் மன்னருமான ஷேக் மக்ருமின் மகன் ஷேக் ரஷீத் (வயது 22) விபத்து ஒன்றில் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை அவர் விபத்தில் உயிரிழந்தார் ஆனால் என்ன விபத்தில், எப்படி உயிரிழந்தார் என்பது குறித்து எதுவும் தெரிவிகப்படவில்லை. அன்றையதினம் துபாயில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. அதற்கு முன்னர் ஜபீல் மசூதியில் இறுதிப்பிரார்த்தனை இடம்பெற்றது. நிதி அமைச்சர் ஷேக் ஹம்தான், பாதுகாப்பு அமைச்சரும் துபாய் இளவரசருமான ஷேக் முகமது ஆகியோர் இறுதிப்பிரார்த்தனையில கலந்து கொண்டனர். இவர்கள் இருவரும் உயிரிழந்த ரஷீதின் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 ♦ 05 ♦ 1905 — மறைவு 06 ♦ 03 ♦ 2001



### அமரர் பொன்னம்பலம் அமரசிங்கம்

*(பிரதம லிகிதர், வனபரிபாலன திணைக்களம்)*
திதி:- 23.02.2002 - சனிக்கிழமை

பாசத்திற்கும் அன்பிற்கும் திருவுருவாய்
விளங்கிய எம் குடும்பத்தின் விளக்கே!
அமரத்துவ ஓராண்டில் உங்கள்
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

*120, அரசடி வீதி,* செல்வி நகுலாம்பிகை அமரசிங்கம்.
*யாழ்ப்பாணம்.* (978) *(ஓய்வுபெற்ற உப தபால் அதிபர், நீராவியடி).*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 ♦ 03 ♦ 1922 — மறைவு 23 ♦ 01 ♦ 2002



### திருமதி ஆறுமுகம் நல்லம்மா

பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
நேசத்துடன் எம்மை எல்லாம் வளர்த்த அம்மாவே!
யோகம் பலதந்து புகழ் பூக்கவைத்து விட்டு
வேகமாய் ஏன்தான் எம்மை விட்டுப் பிரிந்தாயோ?
நீங்காது உன்நினைவு என்றென்றும் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

23.01.2002 அன்று மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிய அன்பு உள்ளங் கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (23.02.2002) சனிக்கிழமை அமரரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*7ஆம் கட்டை,* - மக்கள், மருமக்கள்,
*சண்டிலிப்பாய்.* (929) பேரப்பிள்ளைகள்,

## ஈர விழிகளுடன் நெஞ்சம் உருகும் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 - 08 - 1933 — உதிர்வு 16 - 02 - 2000



### அமரர் குமரையா கந்தசாமி

*(உபதபாலதிபர் - கௌதாரிமுனை)*
திதி: 23-02-2002 ஏகாதசி

எங்கள் இதயக் கோயிலின் இதய தீபம் அணைந்து
இன்றுடன் ஆண்டு இரண்டு ஆனதுவோ?
வேதனையோ விலகவில்லை விழிதேடும்
இடம் எல்லாம் உம் விம்பமே தெரிகிறது
வழிமீது விழிவைத்தோம் வாராயே தந்தையே!
கண்கள் தினம் சொரியும் கண்ணீர்ப் பூக்களாகவே
அஞ்சலி செய்கிறோம் அப்பா என்றும் நீங்கள்
ஆண்டவனில் அமைதி கொள்வீர் அப்பா.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

*12/3, சந்தணமாதா லேன்,* மனைவி,
*பாண்டியன்தாழ்வு,* மக்கள், மருமக்கள்,
*சுண்டுக்குழி,*
*யாழ்ப்பாணம்.* (979) பேரப்பிள்ளைகள்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான கட்டாயக் கல்வி தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலுக்கு மேற்படி சனசமூக நிலையங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களை வருகை தருமாறும் அவர் கேட்டுள்ளார்.

(ம-9)

## 200 பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள்

தென்மராட்சி,பெப்.23

லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள கண்சிகிச்சை நிபுணர்கள் கடந்த 18, 19 ஆகிய திகதிகளில் மந்திகை ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சை முகாமை நடத்தியிருந்தனர்.

சிகிச்சை முகாமில் கலந்து கொண்ட 200 பொதுமக்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

(ம-117)

## கட்டாக்காலிகளை பிடிக்க மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள கட்டாக்காலி மிருகங்களைப் பிடிப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

கட்டாக்காலி மிருகங்களைப் பிடிப்பதற்கு ஆளுமையுடையவர்களை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் மாநகர சபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்குமாறும் -

ஒரு கட்டாக்காலி மிருகத்தைப் பிடிப்பதற்கு 50 ரூபா வீதம் வழங்கப்படும் என்றும் மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் அறிவித்துள்ளார்.

(க-6)

## மூன்று வீதிகள் ரூ.28 லட்சம் செலவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் பல ஆண்டு காலமாகத் திருத்தப்படாத 3 வீதிகள் 28 லட்சம் ரூபா செலவில் சபையின் 2002ஆம் ஆண்டின் நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றது.

கொக்குவில் வராகி அம்மன் வீதி, கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு செபஸ்தியன் ஆலடி வீதி போன்றவையே புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச சபையின் தலைவர் க.மணிபல்லவராஜன் தெரிவித்தார்.

(க-180)

## குடும்பநல சேவையாளர் வினைத்திறமைகாண் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம்,பெப்.23

குடும்பநல சேவையாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்குக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

(க-6-139)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.மாவட்ட மாட்டுவண்டில் சவாரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாட்டுவண்டில உரிமையாளர்கள், சாரதிகள், மாட்டு வண்டிச் சவாரிப் பிரியர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(க-6)


## தேவை



YAMAHA BOAT

எஞ்சின் விற்பனை செய்வதற்கான
பிராந்திய முகவர்கள் தேவை.
கொள்வனவுக் கட்டளையுடன்
கட்டளைக்கான பணம் செலுத்தக்
கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

திருச்செந்தூரன் ரேடிங் கம்பனி,
(C/20785) 315, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



உ
சாயிராம்



## ஆத்மீக நூல் தினம்

"சாயிபாபா களஞ்சியம"
மூன்றாம் ஆண்டில்

காலம் : 24.02.2002 ஞாயிறு காலை 10 மணி
இடம் : "சாயிபாபா களஞ்சியம" கோவில் வீதி, நல்லூர்.
(சிறுவர் பாதுகாப்பு நிதியம் அருகில்)

"காயத்திரீ மந்திரம் நூல் - ஓடியோகசற் ஆத்மீக இலக்கியங்கள், படங்கள், மோதிரம், பென்ரன், ஓடியோ கசற் - வீடியோ கசற் என்பன உங்களுக்காக.


*(வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்)*

அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள், வீட்டில் பிறந்தநாள், திருமண வைபவம் போன்ற நிகழ்வின் போது நீங்கள் கொடுக்கும் அன்பளிப்புடன் ஓர் ஆத்மீக நூலையும் பரிசாக வழங்கி ஆனந்தமடையுங்கள்.

*கோயில் வீதி,* அன்புடன்
*நல்லூர்.* (925) சாயிபாபா களஞ்சியம்.


## நீங்கா நினைவில் 24 ஆண்டுகள்

மகிழ்ந்தது 19 - 02 - 1937 — நெகிழ்ந்தது 18 - 02 - 1978



### அமரர் சிவசம்பு நவரத்தினம்

(FOREMAN Asbestos Cement Industries Limited, Colombo)

இன்சொல்லும் ஏற்றமுறுஞ் செயலும் எவர்க்கும்
உதவும் இளகிய நெஞ்சும் உங்கள் அணிகலன்கள்.
அன்புடனே அரவணைத்து எமை ஆளாக்கிய தெய்வமே!
வளமாக வாழ்கிறோம் - வழிசமைத்த
நீயோ இங்கில்லை!
நீங்கள் சென்றுவிட்ட பாதையில் தடம் பதித்து வாழ்கின்றோம்.

*"லிங்கவாசா"*
*உடுப்பிட்டிச் சந்தி, உடுப்பிட்டி.* (887) - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வன் தேவராசா (தேவர்) ரமேஸ்குமார் (ரமேஸ்)

தோற்றம்: 1981.03.17 — மறைவு: 2002.01.24

"என் அன்புக்குரிய மகனே! ஜேர்மனில்
வாழும்போது எம்மை மறக்கவில்லையே!
மூன்று நாள் நோய் உன்னை இறைவனடி சேர்த்தாலும்,
உம்மை நாம் மறப்போமோ"
உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி தவம் செல்வி குடும்பத்தினர்
(சிற்றன்னை)
*உதய கலைவாணி வீதி,* தற்போதைய முகவரி:
*பலாலி.* (844) *ஆதியாமலை, உடுப்பிட்டி.*

உதயன்

## கடலிலும் அவதானம் தேவை

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பகைமை உணர்வுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைத்து, நிலையான போர்நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்யும் உடன்படிக்கையில் இருதரப்புத் தலைவர்களும் கைச்சாத்திட்டிருக்கின்றனர் என்ற செய்தி நாட்டுமக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் தருணம் இது.

அதேவேளை, சமாதானத்தின் மீதான நம்பிக்கையை அச்சுறுத்தும் விதத்திலான விபரீத சம்பவம் ஒன்று முல்லைத்தீவுக் கடற்பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது.

முல்லைத்தீவுக் கடலில் விடுதலைப் புலிகளின் படகுகளும் கடற்படைப் படகுகளும் மோதியிருக்கின்றன. இருதரப்பினருமே மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய பிறகு இடம்பெற்ற முதலாவது மோதல இதுவாகும்.

இந்த மோதலில் கடற்படையினர் தரப்பிலும் புலிகளின் தரப்பிலும் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடற்படையினர் மூவர் உயிரிழக்கவும் நேர்ந்துள்ளது. பதிலுக்கு வன்னியில் கரையோரக் கிராமங்கள் மீது அரச வான்படை விமானங்கள் நடத்திய குண்டு வீச்சினால் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

'அரசுத்தரப்பினர் பேணிவரும் மோதல்தவிர்ப்பு தரைப் பகுதிகளில் மட்டுமே கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. எனவே கடலில் இடம்பெற்றிருக்கும் மோதல் பாரதூரமான ஒன்றல்ல. தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை இது எந்த வகையிலும் பாதிக்காது' - என்று இந்தச் சம்பவம் குறித்து அரசுத் தரப்பில் கூறப்பட்டிருக்கும் விளக்கத்தை அப்படியே ஏற்றுக்கொள்வது அபத்தமானது.

தரையில் அமுல் செய்யப்படும் மோதல்தவிர்ப்பை கடலிலும் விஸ்தரித்து, சுதந்திரமான கடற்போக்குவரத்துக்கு வழிசெய்யவேண்டும் என்று சமாதான முயற்சிகளின் ஆரம்பம் முதலே புலிகள் தரப்பு வலியுறுத்தி வந்திருக்கிறது. ஆனால் நிரந்தர யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுவிட்ட பிறகும் கூட அரசுத்தரப்பு இந்த விடயத்தில் தயக்கம்காட்டி வருகின்றது.

சமாதான சூழலை நிலைநிறுத்த மிக அவசியமான கடற்போக்குவரத்து விடயத்தில் அரசு கொண்டுள்ள விட்டுக்கொடாத போக்கின் விளைவையே முல்லைக் கடற்சமர் உணர்த்தியிருக்கிறது எனலாம்.

நாடு முழுவதும் சமாதான சூழலை அனுபவித்துக் கொண்டிருக்க கடற்படைச் சிப்பாய்கள் மூவர் அநியாயமாகத் தங்கள் உயிர்களை இழந்திருக்கிறார்கள். கடலில் வெடித்த மோதல் பகைமை உணர்வைத் தூண்டிவிட அதன் விளைவை வன்னியில் வசிக்கும் அப்பாவி மக்கள் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது.

இருதரப்புகளும் சமர்ப்பித்த யோசனைகள் மற்றும் திருத்தங்களின் அடிப்படையில் நோர்வே அரசு தயாரித்த யுத்தநிறுத்த உடன்பாட்டின் இறுதி வடிவத்தை அரசுத் தரப்பும் விடுதலைப் புலிகளும் பூரண சம்மதத்தோடு ஏற்றுக்கொண்டுள்ளன.

கட்டுப்பாடற்ற கடற்போக்குவரத்து மற்றும் மீன்பிடித் தடைநீக்கம் போன்ற சர்ச்சைக்குரிய விடயங்களுக்கு யுத்தநிறுத்த உடன்படிக்கை உடனடித் தீர்வு எதனையும் கொண்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயங்களை நிரந்தர யுத்தநிறுத்தம் அமுலுக்குவரும் தினத்தில் இருந்து ஒருகால அட்டவணைக்குள் தீர்த்துவைக்க அரசுத் தரப்பு புலிகளுக்கு உறுதி அளித்திருக்கிறது.

எனவே தரையில் மட்டுமன்றி கடலிலும் அமைதி நிலைமை தோன்ற இன்னும் சிறிது காலம் எடுக்கும் என்பது தெளிவு.

இந்தக் காலப்பகுதியை அவதானமாகத் தாண்டிக் கடந்தால்தான் நேரடிப் பேச்சுக்களுக்கான வாய்ப்பை வென்றுபெறமுடியும்.

அதுவரை கடலிலும் தரையிலும் மிகுந்த அவதானம் தேவை.

அந்த வகையில் -

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு சமாதான முயற்சிகள் ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ள வேளையில் முல்லைக் கடலில் இடம்பெற்ற விரும்பத்தகாத - தவிர்த்திருக்கக்கூடிய - அனர்த்தம், சமாதான இலக்கை நோக்கிய பயணத்தில் விடாப்பிடியாக இருக்கும் இருதரப்புத் தலைமைகளுக்குமே ஒரு பாடமாக அமையட்டும்.

# புலிகளை இராணுவரீதியில் தோற்கடிப்பதால் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகிட்டுமா?

## நாடாளுமன்றில் சம்பந்தன் கேள்வி

கொழும்பு,பெப்.23

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதன் மூலம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை தீர்ந்துவிடுமா? - இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன்.

நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட விவாதத்தில கலந்துகொண்டு உரையாற்றிய அவர் -

ஆயுதப் போராட்டத்தில் பிரவேசித்த ஜே.வி.பியினர் தற்போது பொதுவோட்டத்தில் பிரவேசித்துள்ளனர். இவர்கள் இனப்பிரச்சினைக்கான தமது கருத்தை மாற்றிக் கொள்ளுதல்வேண்டும். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளாமல் திருத்தச் சட்டமூலத்தை புலிகளின் நடவடிக்கையென ஜே.வி.பியினர் கருதுகின்றனர். பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியினரும் நடந்து கொள்ளும் முறையினால் தமிழ் மக்கள் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இழந்துவிடும நிலைமை உருவாகி விடும்.

வடக்கு-கிழக்கில் உள்ள யதார்த்த நிலை பற்றி எதிரணியினர் விளங்கிக் கொள்ளவேண்டும். பல இடங்களில் மக்கள் இல்லை. இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இந்நிலைமையில் மக்கள் தமது வாக்குரிமையை எவ்வாறு வெளிப்படுத்தமுடியும்?

இதைவிட இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு தேர்தல் காலத்தில் பொலீஸாரோ அதிகாரிகளோ செல்லமுடியாது. இதன் விளைவாகவே நிலைமையை ஆராய்ந்து முடிவெடுக்கும் அதிகாரம் தேர்தல் அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவரீதியில் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதனை மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் விளங்கியுள்ளன. ஆனால் ஜே.வி.பியினர் இராணுவ ரீதியில் புலிகளைத் தோற்கடிக்க முயல்கின்றனரே! தமிழ்,சிங்கள இளைஞர்கள் தொடர்ந்து மடிய வேண்டுமென ஜே.வி.பியினர் விரும்புகின்றனரா?

சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுக்கு பொ.ஐ.முன்னணியினதும், ஜே.வி.பியினதும் ஆதரவு தேவை. எனவே நாகரிகமான முறையில் செயற்படுமாறு மன்றாடிக் கேட்கின்றேன்- என்றார். (க-ரி)

### தேர்தல் ஆட்சேப மனுக்கள்

நேற்றுமுன்தினம் நான்கு தேர்தல் ஆட்சேப மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆராயப்பட்டன.

இம்மனுக்களை இம்மாசம் 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகவர்த்தன முன்னிலையிலேயே இந்த நான்கு தேர்தல் மனுக்களும் ஆராயப்பட்டன.

## நாட்டு நடப்பு

### ஹோட்டலில் மிதிவெடி!

அதிக பசியினால் வாடி
ஆகாரம் உண்ண எண்ணி
புதிதாக என்ன போட்டிரென்று
பூரித்து கேட்டார் மாஸ்டர்
அதி விரைவாய் ஓடி பார்த்துவிட்டு
அடுப்பில் "மிதிவெடி" என்றான் பையன்
மிதிவெடி என்று கேட்டபோது
மெதுவாக பண்டிதர் ஓடலானார்
அதிசுவை உண்டி ஐய்யா!
அதில் ஒன்றை சுவையுமென்ன
இது என்ன பார்ப்போ மென்று
இட்டமாய் சுவைத்தார் வாத்தி
அதிசுவை அதினில் கண்டு
அதிலொன்றை வாங்கிச் சென்றார்
புதிதாக போண்டா பெயரை
எறிகுண்டென மாத்தலாமே! என்றார்.

*- விகடகவி.*

## நாடாளுமன்றில் ஒரே கூச்சல், குழப்பங்கள்

# சபா மண்டப நடுவில் தரையில் அமர்ந்து எதிரணி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.23

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கூடியபோது கூச்சலும், குழப்பமும் சபையை அமளிதுமளிப்படுத்தியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் கறுப்புப்பட்டி அணிந்துவந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். சட்டமூலப் பிரதிகள் சபா மண்டபத்துக்குள் வீசி எறியப்பட்டன. அதற்கும் மேலாகச் சபா மண்டபத்தின் நடுவில் வந்து தரையில் அமர்ந்தும் கூச்சல் எழுப்பினர். சபையை அமைதி நிலைக்குக் கொண்டுவரச் சபாநாயகர் பெரும பாடுபட்டார்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது. வழமையான நடைமுறைகளின் பின் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுருத்த ரத்வத்த உட்படப் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாகவும், தேர்தலின்போது இடம்பெற்ற வன்முறைகள், படுகொலைகள் தொடர்பாகவும் அறிக்கை ஒன்றை விடுத்துப் பேசினார்.

### பெர்னாண்டோ புள்ளே (பொ.ஐ.மு.)

எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சைத் தொடர்ந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பேச அழைக்கப்பட்டார். பேசுவதற்கு எழுந்த பெர்னாண்டோ புள்ளே உடனே பேச்சை ஆரம்பிக்கவில்லை. இவ்வேளையில் எதிர்த்தரப்பில் இருந்து ஒரே கூச்சல்.

கைது செய்யப்பட்டுள்ள அனுருத்த ரத்வத்த, புத்தளம் எம்.பி.டி.எம. தஸநாயக்க ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோஷம் எழுப்பினர். வாசகங்கள் எழுதிய 'போஸடர்'களையும் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### விமல் வீரவன்ச (ஜே.வி.பி)

இச்சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச விளக்கம் ஒன்றை அளிக்கப்போவதாக எழுந்தார். விளக்கம் அளிக்கவும் அறிக்கை சமர்ப்பிக்கவும் முன் அறிவித்தல் செய்யவில்லை. அதனால் அவருக்கு இடமளிக்க சபாநாயகர் மறுத்து விட்டார்.

இதனால் ஏற்கனவே ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த ஸ்ரீ ல.சு.கட்சி உறுப்பினர்களுடன் ஜே.வி.பியினரும் சேர்ந்து கொண்டனர். மேசைகளைத் தட்டியும், கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் சபாநாயகர் ஆளும் தரப்பில் லக்ஷ்மன் யாப்பாவைப் பேசும்படி அழைத்தார்.

ஆனால், எதிர்க்கட்சியினர் அவரைப் பேசவிடாமல் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். பேச்சுக்கு இடையூறு விளைவித்தனர்.

### அனுரா ஒழுங்குப் பிரச்சினை

முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க இவ்வேளையில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அவரது கூற்றை ஏற்றுக் கொண்ட சபாநாயகர், ஜே.வி.பி. உறுப்பினர் விமல் விரவன்சவுக்கு ஏன் விளக்கம் அளிக்க இடமளிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். அனுரா பண்டாரநாயக்க எம்.பி. அதை ஏற்றுக்கொண்டபோதும் எதிரணியினர் மேசைகளைத் தட்டியும் கூச்சல் போட்டும் அமைதியைக் குலைத்தனர்.

சபாநாயகர் பெரிதும் சிரமப்பட்டும் சபையில் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை.

இதனால் பேசிக்கொண்டிருக்கும் லக்ஷ்மன் யாப்பாவின் ஒலிபெருக்கியைத் தவிர அனைத்து 'மைக்'குகளும் தடைசெய்யப்பட்டன. உறுப்பினர் தொடர்ந்தும் பேசிக்கொண்டே இருந்தார்.

### தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டம்

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆசனத்தில் இருந்து எழுந்து வந்து சபா மண்டபத்தின் நடுவில் தரையில் அமர்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து மேலும் பலர் தரையில் அமர்ந்து கூச்சல் எழுப்பினார்கள். கூச்சல்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில் லக்ஷ்மன் யாப்பா பேசிமுடித்தார். அதன்பின் சபாநாயகர் எதிரணி உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயைப் பேச அழைத்தார் அவரோ தரையில் அமர்ந்திருந்தார்.

உடனடியாக அனுரா பண்டாரநாயக்க அவரை எழுந்து வந்து பேசும்படி கேட்டுக் கொண்டார். அதன் பின தரையில் அமர்ந்து இருந்தவர்கள் எழுந்துவந்து ஆசனங்களில் அமர்ந்தனர். பின் சபையில் அமைதி ஏற்பட்டது. எனினும் கூச்சலும் குழப்பமும் அடங்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ரவிராஜ் பேசும்போதும் எதிர்க்கட்சியினர் குழப்பம் விளைவித்தனர். (க)

# அமைதி நிலையைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கிலும் சமூகநல சேவைகள்

## அமைச்சர் சமரவீர அறிவிப்பு

கொழும்பு,பெப்.23

வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஏற்படவிருக்கும் அமைதி நிலையினைப் பயன்படுத்தி அப்பகுதிகளில சமூக நலனோம்புத் திட்டங்களை அரசின் நூறுநாள் வேலைத் திட்டத்தின் கீழ் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சமூக நலனோம்புகை அமைச்சர் ரவி சமரவீர மருதானை சீநோர் விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு உரிய முறையில் சமூகசேவை அமைச்சின் நிவாரண உதவிகள் சென்றடையவில்லை. எனவே அமைதி நிலையை பயன்படுத்தி எமது சேவைகளை நடத்தவிருக்கின்றோம். இதன் நடவடிக்கையாக அப்பகுதிகளில் வாழும் வறிய மக்கள், வசதியில்லாதவர்கள், இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்போர் ஆகியோரை இனம் கண்டு அவர்களுக்கான உடனடி நிவாரண உதவிகளை வழங்க இருக்கின்றோம். ஊனமுற்றவர்களுக்கும் வேலை வாய்ப்புகள் வழங்கி சுய தொழில்களுக்கு உபகரணங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஓய்வூதிய சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சுயதொழிலில் ஈடுபடும் மூவாயிரம் பேர் இத்திட்டத்தினுள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

- என்றார் அமைச்சர். (க-ரி)

### அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அபிவிருத்தித் தொண்டர்கள் அனைவரையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பயிற்சி நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அபிவிருத்திப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

(க-6)

# சண்டிலிப்பாய் இந்துவில் இன்று இலவச மருத்துவமுகாம்

மானிப்பாய்,பெப்.23

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரால் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் இலவச மருத்துவ முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் மகப்பேற்று நிபுணர் டாக்டர் ஜி.பவானி, சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.இரத்தினசிங்கம், பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் ஏ.ஞானமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் சலரோக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என்று மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது. (க-6-90)

# குடாநாட்டில் எரிபொருள் விநியோகம்; யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்

## திங்களன்று அரச அதிபர் தலைமையில்

குடாநாட்டில் எரிபொருள் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குடாநாட்டு மக்களுக்கு எரிபொருள், தட்டுப்பாடு ஏற்படாத வகையில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளும், எதிர்கால நடைமுறைகள் பற்றியும் இந்த கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி எஸ்.சிவஞானமும் கலந்துகொள்ளவுள்ளார்.

குடாநாட்டில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், அனுமதி பெற்ற எரிபொருள் விற்பனை முகவர்கள் ஆகியோரைத் தவறாது இதில் பங்கு பற்றுமாறு அரச அதிபர் அறிவித்திருக்கிறார். (க-180)

### நாளை

மாசி 12
ஞாயிற்றுக்கிழமை
(24-02-2002)
திதி : துவாதசி
முன்னிரவு 9.43 வரை.
நட்சத்திரம் : புனர்பூசம்
பிற்பகல் 5.06 வரை
சுபநேரம் : 9.30 - 11.00
ராகுகாலம் : 5.00 - 6.30
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தெளிந்த மனமே தெய்வத்தைத் தெரிந்துகொள்கிறது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினாதீவைச் சேர்ந்த
சைவப் புலவரும் சித்தாந்த பண்டிதருமாகிய

## திரு. நா.விசுவலிங்கம்

அவர்கள் இந்து சமய கலாசார அமைச்சினால் 'கலைஞான கேசரி' என்னும் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும், சமாதான நீதிவானும், பிரசித்த நொத்தாரிசும் ஆவார். அத்துடன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான அறங்காவலர் சபை உறுப்பினரும், நயினாதீவு பிரஜைகள் குழுச் செயலாளரும் ஆவார்.

இவர் பல்வேறு சிறப்புகளையும் பெற்றுப் பல்லாண்டு வாழ அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

(1030) அன்பர்கள், ஆதரவாளர்கள்,
நயினாதீவு மக்கள்.



# ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்

இன்றைய ஸ்பெஷல் : வைற் றைஸ் உடன் சிக்கன் தந்தோரி.
வழமையான உணவுப்பொதிகளும் உண்டு.
உணவு நேரம்: நண்பகல் 12.00 மணிமுதல் 3.00 மணிவரை
முன் வருபவர்களுக்கு முன் இடம் உண்டு.

**ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா** உங்கள் விருந்தகம்.
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
(1032) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

நவயுகத்தின் நாயகி ஜெசித்தாரா!
சுவையின் மறுநாமம் ஜெசித்தாரா!!



# நன்றி நவிலல்

கடந்த 18.02.2002 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

## நாகலிங்கம் சுப்பிரமணியம்

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் மலர் மாலைகள், மலர் வளையங்கள் சாத்தியும், சகல வழிகளிலும் இறுதிவரை எமக்குப் பல உதவிகள் புரிந்த வைத்தியருக்கும் மற்றும் பத்திரிகை, தொலைபேசி வாயிலாக கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில்.* (1029) - குடும்பத்தினர்.



# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் லிகிதர்களாகப் பணியாற்றும்
திருமதி சிவராணி சற்குணேஸ்வரன் அவர்களது தாயாரும்,
திரு. சற்குணேஸ்வரன் அவர்களின் மாமியாரும்,
எமது வீதி ஒப்பந்தக்காரர்
திரு. சிற்றம்பலம்
அவர்களது துணைவியாருமாகிய

## திருமதி சிற்றம்பலம் கமலவேணி

அவர்களது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*வீதி அபிவிருத்தி அதிகாரசபை,*
*யாழ்ப்பாணம்.* (1020)

மாகாணப் பணிப்பாளர் அலுவலக,
பிரதம பொறியியலாளர் அலுவலக,
உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள்.



# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1945 - 01 - 01



உதிர்வு 2002 - 02 - 21

கொட்டடி, முத்தமிழ் வீதி

## அமரர் வரப்பிரகாசம் யேசுதாசன்

(தர்மலிங்கம்)

*ஓடி இருந்தோம் - இன்று*
*நீ மட்டும் உதிர்ந்து விட்டாய்!.*
*கோயில் வீதியில் சிரித்து வாழ்ந்திருந்தோம் - இன்று*
*நீ மட்டும் சிரிப்பு மறந்து தூங்கிவிட்டாய்!*
*கூடிப் பறந்தோம் - இன்று*
*நீ மட்டும் சிறகுடைந்து விழுந்துவிட்டாய்!*
*அழுது துடிக்கின்றோம் எமையாற்ற - நீ*
*இல்லையே நண்பா!*
*நாடித்திரிகின்றோம் நண்பா!*
*உன்னை நாம் காண்பதெப்போ நண்பா!*

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
உன் பிரிவால் துயருறும்
(1023) யா/வண்ணை சிவன் கோயிலடி நண்பர்கள்.


# 32 பேர் விடுவிப்பு

கொழும்பு,பெப்.23

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர், யுவதிகள் 32 பேர் சட்டமா அதிபரின் சிபார்சின் பேரில் உயர் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டனர்.

வவுனியாவைச் சேர்ந்த வி.ஆர். இன்பநிதி என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஏதிரி சூரிய, விக்னேஸ்வரன், அசோகா டி சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போதே உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு சட்டமா அதிபர் இதனைக் கொண்டு வந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட வி. ஆர்.இன்பநிதி இன்னமும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-ரி)

# பாதயாத்திரையில் வடமராட்சி அணியும் நல்லூரில் இணையும்

யாழ்ப்பாணம்,பெப்.23

நல்லூரிலிருந்து நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள சமாதான பாதயாத்திரையில் வடமராட்சிப் பிரதேச சமாதான அணியினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று காலை பருத்தித்துறை லூர்து மாதா தேவாலயத்தில் சமாதானம் வேண்டி நடைபெறும் விசேட ஆராதனையின் பின்னர் சமாதான அணியினர் ஊர்வலமாக பிரதான வீதி வழியாக (மந்திகை, மாலி சந்தி, நெல்லியடி ஊடாக) கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்தைச் சென்றடைவர்.

அங்கிருந்து நாளை காலை புறப்பட்டு நல்லூரிலிருந்து புறப்படும் பாதயாத்திரையுடன் இவர்கள் இணைந்து கொள்வர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க-117)

# சங்கக் கடைகளில் மண்ணெண்ணெய் தாராளம்!

அரியாலை,பெப்.23

யாழ். பல.நோ.கூ.சங்கத்தின் கிளைகளில் பாவனையாளர்கள் மண்ணெண்ணெயை எதுவித கட்டுப்பாடும் இன்றி தாராளமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

பங்கீட்டு அட்டைக்கான மண்ணெண்ணெய் விநியோகம் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நீக்கப்பட்டு பாவனையாளர்களுக்குத் தற்போது தாராளமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம்-

ப.நோ.கூ.சங்கத்தின் முற்றவெளிப் பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் மசலை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-17)

# கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் முறைப்பாடு

தென்மராட்சி,பெப்.23

வடமராட்சிக் கடலில் அதிகாலை 4.30 மணிக்கு மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டபோதிலும் குடத்தனை பொற்பதிப் பகுதிக் கடலில் காலை 6.00 மணிக்குப் பின்னரே கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதாக இப்பகுதி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

காலை 6.00 மணிக்கு கடலுக்குச் சென்று காலை 8.00 மணிக்குள் கரைக்குத் திரும்ப வேண்டுமென படையினர் அறிவித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (க-117)

# அபிவிருத்தி தொண்டர் கலந்துரையாடல்

தென்மராட்சி,பெப்.23

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக இரண்டாம் பிரிவு அபிவிருத்தி தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10.30 மணிக்கு புலோலியில் உள்ள பளைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் அபிவிருத்திப் பரிசோதகர்கள், போதனாசிரியர்கள் ஆகியோரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (க-117)

# விவசாயிகளை ஊக்குவிக்க நூறு நாள் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.மாவட்டத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் 100 நாள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தென்னை நடுகை, அவரையினப் பயிர்ச்செய்கை, கமக்காரர் ஓய்வூதியம், வதிவிட வேளாண்மை, சிறுதானிய உற்பத்தி, விவசாயம் சார் கருத்தரங்கு, சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம் விநியோகம் போன்ற திட்டங்களே நடைபெற்று வருவதாக யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்தார். (ஐ-180)


# மாபெரும் சிரமதானப் பணி

***இடம்*** :- **சாவகச்சேரி பொதுச் சந்தை**
***காலம்*** :- **நாளை(24.02.2002) ஞாயிறு காலை.8.00 மணி**

சாவகச்சேரி நகரசபையின் அனுமதியுடன் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் சிறப்புப் பிரதிநிதிகளான கௌரவ இந்து கலாசார அமைச்சர், கௌரவ சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர், அரச உயர் அதிகாரிகள், நகரசபைத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கௌரவ வருகையோடு மாபெரும் சிரமதானப் பணி ஆரம்பமாகின்றது.

இந்நிகழ்வினைச் சிறப்பிக்க நகர நலன்விரும்பிகள், ஆதரவுகாட்டும் அரசசார்பற்ற அமைப்புக்கள், வர்த்தகசங்க அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைந்து செயலாற்ற பணிவுடன் அழைக்கின்றோம்.

***குறிப்பு*** :- **எமது வணிக மன்ற அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சிரமதானப் பணிக்கான உபகரணங்களோடு கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். உடனடியாக ஆரம்பிக்க இருக்கும் வர்த்தக நிறுவனங்களை உடன் பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம். கிடைக்கும் உரிமைகளில் முன்னுரிமையளிக்கப்படும்.**

கைத்தொழில் வணிகர் மன்றம்,
(1022) சாவகச்சேரி.



# முறைசாராக் கல்வி
## யா/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை

*கீழ்க்காணும் நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

(1) சுருக்கெழுத்து தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்)
(2) கணக்குப் பதிவியல் (ஆங்கிலம்)
(3) உடையமைத்தல்
(4) கணனி பயிற்சி நெறி

**முடிவு திகதி: 04-03-2002**

*பருத்தித்துறை.* (C/20851) - அதிபர் -



# கண்ணீர் அஞ்சலி
## அமரர் சின்னையா ராசதுரை

**(இளைப்பாறிய எழுதுவினைஞர், பலாலி ஆசிரிய கலாசாலை)**

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பிரதம எழுதுவினைஞராகப் பல ஆண்டு காலம் சிறப்பாகப் பணியாற்றியும், சமயச் செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தும் அனைவரையும் அன்புடன் அரவணைத்து வழிகாட்டிய சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த அமரர் சின்னையா ராசதுரை அவர்களுக்கு எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
(C/20852) *பலாலி ஆசிரியர் கலாசாலை.*



# கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் சித்திர ஆசிரியர்
செல்வி ந.பிரமிளா அவர்களது அன்புத் தந்தையார்

## க.சி.நமசிவாயம்

அவர்கள் 08.02.2002இல் காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்,
(1026) யா/பெரியபுலம் ம.வி.



# கண்ணீர் அஞ்சலி
## திருமதி விஜயலட்சுமி சிவகுமாரன்

(சிரேஷ்ட ஆசிரியை, யா/வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

மலர்வு: 21.09.1953 உதிர்வு: 21.02.2002

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை **திருமதி விஜயலட்சுமி சிவகுமாரன்** அவர்கள் 21.02.2002 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். இவர் 1979ஆம் ஆண்டிலிருந்து இறுதிவரை தமது சேவைக் காலம் முழுவதையும் எமது பாடசாலையிலேயே கழித்த சிறப்புக்கு உரியவராவார்.

அன்னாரின் மறைவையொட்டித் துயருறும் அவரது குடும்பத்தினருடன், நாமும் துயர்பகிர்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*
*கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர் சங்கம்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*
(C/20850) *பருத்தித்துறை.* **யா/வட இந்து மகளிர் கல்லூரி.**

| | | | |
|---|---|---|---|
| | செவ். | சனி ரா. | வி. சந். |
| சூ. ▲ வெ. | இராசிச் சக்கரம் | | |
| புத. | | | |
| | கே. | | |

*மாற்றம்:*

புனர்பூச நட்சத்திரம் சந்திரன் மிதுன இராசியில் நிற்கும்.

அரசியலில் மேடுபள்ளம். ஆம் என்றால் இல்லை, இல்லை என்றால் ஆம். இதுதான் அரசியல். சந்தர்ப்பவாதம், சந்தேகவாழ்வு நீடிக்கும். அதைச்செய்து தருவேன், இதைச்செய்து தருவேன் என்றுகூறி நான்கு விழாவிற்குத் தலைமைப் பதவி, ஒரு கூட்டம் கைதட்டும், பூமாலை இப்படியே போனால் வீடு வருமா? நாடு உருப்படுமா?

மக்களின் எதிர்பார்ப்பு, சமயத் தலைவர்களின் மறைமுக அழுத்தம். இந்தியாவில் அரசியலில் தெற்கில் ஜெயலலிதா மீண்டும் ஆட்சிப்பீடம். பலமாற்றங்கள். வடக்கில் கொந்தளிப்பு. மேற்கு நாடுகளின் போக்கில் மாற்றம். தலிபான் புத்துணர்வு, ஆப்கானிஸ்தானில் எதிர்ப்புணர்வு. மத்திய கிழக்கு நாடுகளில் பயங்கர அழிவுகள், இந்து சமுத்திர, பசுபிக் சமுத்திர அண்டைய நாடுகளில் செயற்கை அழிவுகள் ஏற்படும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

## 24.02.2002 ~ 02.03.2002

## மேடம்

போட்டி என வந்து விட்டால் ஒருவர் உறுதியுடன் செயற்பட வேண்டும். சலனப்பட்டால் அல்லது பயப்பட்டால் எந்தக் காரியங்களையும் சரியாகச் செய்ய முடியாது. வாகனச் செலவு புடைவை, ஆபரணச் செலவு ஏற்படும். சகோதரர் பகைமை கொள்வர். காணிபூமியில் மாற்றங்கள் ஏற்படலாம். சத்துருக்களை வெல்லுதல். சிலருக்குப் பிரயாணம் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றகரமான காரியங்கள் சாதகமாகும். வயிற்றுவருத்தம், திடீர் கோபம், காய்ச்சல், என்பன கொடுக்கும். வியாபாரத் துறை, புடைவைத்துறை, நகைத் துறை, செய்தித்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: - திங்கள் (வியாழன், வெள்ளி, சனி மத்தியானம்)*

## இடபம்

நீதியற்ற நாலுபேர் மாறி, மாறி ஒரே பொய்யை, சாட்சிகள் வைத்துச் சொன்னால் கூட பொய் என்றுமே உண்மையாகிவிட முடியாது. தொழில் ஸ்தானத்தில் கோள் சொல்லுவார்கள். எதிர்ப்பாலார்கள் எதிர்ப்பார்கள், அரச உதவிகள் கிடைத்தல், குடும்பத்தினருக்காக ஓடியாடித்திரிதல், சல வருத்தம், ஈரல்வருத்தம், வாய்வுத் தொல்லை என்பனவரும். தூரத்துச் செய்திகளால் மனமாற்றங்கள் ஏற்பட இடம் உண்டு. சட்டத்துறை, குருத்துறை, காவல்துறை, மருத்துவத்துறை, இசைத்துறை, ஹோட்டல்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் :- திங்கள் (வியாழன், வெள்ளி மத்தியானம்)*

## மிதுனம்

காகிதத்தில் ஒன்றும் பேச்சில் ஒன்றுமாகப் பல மாறுபட்ட கருத்துக்களைச சொல்லிக் குழப்பும் பலர் இவ்வுலகில் இருக்கின்றார்கள். அவர்கள் என்றும் வெற்றிப் பாதைகளை அணுக முடியாமல் தத்தளித்தபடி இருப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் பொருள் வரவு, உயர்ச்சிகள், எதிர்பாலார்களுடன் தர்க்கம் ஏற்படலாம். ஒரு மயக்கம் நீதியற்ற முறையில் வரவேண்டுமா? வாதவிறைப்பு, நாரி உளைவு, வாய்வுத்தொல்லை என்பன வரும். போக்குவரத்துத்துறை, வியாபாரத் துறை, புடைவைத்துறை, நகைத் துறை, ஆராய்ச்சித்துறை, இசைத் துறை போன்ற தீ்றையினர்களுக்குப் பல நன்மைகள் நடக்கும்.

*அதிர்ஷ்டநாள்: - திங்கள், (வியாழன், வெள்ளி மத்தியானம்)*

## கடகம்

இரத்த உறவைத் தருபவன் ஆண். சந்ததியைப் பெற்றுக் காப்பாற்றித் தருபவள் தாய்! - இவர்களின் சந்ததி பெருக - அவற்றைக் காப்பாற்ற வல்லமைகளைக் கொடுப்பவன் செவ்வாய். இவன் ஜாதகத்தில் பாதிப்பைத் தந்தால் குடும்ப உறவு நிச்சயம் பாதிக்கப்படும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். சல வருத்தம், நெஞ்சுப் படபடப்பு, கண் வருத்தம் என்பனவரும். நகைத் துறை, அரசியல்துறை, கடல்துறை, போக்குவரத்துத்துறை, ஆசிரியத் துறை போன்றதுறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்- திங்கள், வியாழன், வெள்ளி மத்தியானம்)*

## சிங்கம்

இவ்வுலகில் நடைமுறை நிர்வாகம் எப்பொழுதும் சிங்க இராசி இலக்கினகாரரிடமே இருக்கும். ஆனால் ஆனி மாதம் மட்டும் மகம் நட்சத்திரகாரருக்கு சோதனைகள் வந்துபோகும். எதையும் எதிர்கொள்ளுங்கள். வெற்றி கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும், அதட்டலும் மாறிமாறி இருக்கும். தூரத்துச் செய்திகள், புதிய பொறுப்புக்கள், சிலருக்குப் பிரயாணங்கள், பொதுத்தொண்டால் சிறப்பு, அரச அதிகாரிகள் உதவுதல், உஷ்ண வருத்தம், நாரிநோ, காலில் அடிபடல், நெஞ்சுப் படபடப்பு, சளித்தொல்லை, வாய்வு வருத்தம் என்பன வரும். புடைவைத்துறை, நகைத்துறை, குருத்துறை, சட்டத் துறை, மருந்துத்துறை, பிரயாணத் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி, சனி மத்தியானம்.*

## கன்னி

ஆண் - பெண் இருவரையும் திருமணப் பந்தத்தில் சேர்க்கும் முன்பு செவ்வாய் கிரகதோஷம், நட்ஷத்திரப் பொருத்தம் இருவரின் ஜனன ஜாதகக் குறிப்பின் வீட்டுப் பொருத்தங்கள் ஒற்றுமையாகப் பொருந்தவேண்டும். அல்லது குடும்பப் பிரிவு நிச்சயம் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் புதிய அலுவல்கள் வரும். குலப்பெருமையைப் பெரிதாகப் பேசித்திரிவீர்கள். முற்கோபம் வரும். ஆடை, ஆபரண சிந்தனைகள் வரும். நண்பர்கள் உதவுவார்கள். மேலதிகாரிகள் உதவுவார்கள். சளி, கிருமித்தாக்கம், வாதவிறைப்பு, நாரிப் பிடிப்பு என்பன வரும். மருந்துத துறை, பாதுகாப்புத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி, சனி மத்தியானம்.*

## துலாம்

உங்களிடம் இவ்வுலகம் நீதியை அதிகம் எதிர்பார்க்கின்றது. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்பைத் தைரியமாக ஏற்றுக்கொண்டு வழி நடத்த முயலுங்கள். நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். பொருள் சிறப்பு, மாற்றங்கள், தூரத்துச் செய்திகள், அடிக்கடி கோபம் என்பன வரும். எதிர்ப்பாலர்கள் உதவி செய்து தருவார்கள். தலைவலி, வயிற்றுவலி, குடல்வருத்தங்கள், நரம்புச் சோர்வு என்பன ஏற்படும். குருத் துறை, வாகனத்துறை, உற்பத்தித் துறை, செய்தித்துறை, சட்டத்துறை, கொம்பியூட்டர்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, (வியாழன், வெள்ளி மத்தியானம்)*

## விருச்சிகம்

சில பீடங்களில் பெரியவர்கள் போன்று இருப்பவர்கள் அரசியல்வாதிகள், அமைச்சர்களுக்கு வரவேற்பளித்தும், அவர்களுக்குப் பின்னால் திரிவதனால் அவர்கள் செய்யும் தவறுகள் என்றும் மறைக்கப்படமாட்டாது. தொழில் ஸ்தானத்திலும் செல்வாக்கு சொல்வாக்கால் வரும். சட்டப்படி கதைப்பீர்கள். முற்கோபம் வரும். குடும்பத்தில் கலகலப்பு, அயலவர்கள் வீண்பழி சுமத்துவர். நெஞ்சு வருத்தம், நாரிப்பிடிப்பு, கோபம், கண் கூச்சம், கால் அடிபடல், நரம்புச் சோர்வு என்பன வரும். இரும்பு வேலை, குருத்துறை, மருந்துத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, வெள்ளி மத்தியானம்.*

## தனுசு

நீண்ட பாதையில் உண்மை தேடி நாம் நடந்து திரிகின்றோம். சட்டத்தைத் தாக்கும் சட்டத்தரணிகளின் சொல் வல்லமை தளர்ந்து போகக் கூடாது. ஒளிவிளக்கேற்ற வேண்டும். அல்லது நாட்டில் அதர்மம் தலை தூக்கிவிடும். அழிவுகள் பெருகும். நல்லவர்கள் வாழமுடியாது. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். கருத்துவேற்றுமை குடும்பத்தில் ஏற்படும். நண்பர்களின் உதவிகள் கிடைத்தல், வீடு வாகன சுகம், இசைத்துறைச் செலவு, அரசியல் வாதிகளின் தொடர்பு என்பன ஏற்படும். வாய்வுத்தொல்லை, உணர்வுக் கொந்தளிப்பு, நாரிநோ, கைகால் பிடிப்பு என்பன வரும். போக்குவரத்துறை, வியாபாரத்துறை, ஆபரணத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி மத்தியான்ம்.*

## மகரம்

தோல்விகளைக் கண்டு துவண்டு விடக்கூடாது. வெற்றிகளின் முதல் படிகளில் அத்தோல்வியின் அனுபவம் முன்னின்று வழிநடத்தும். அனுபவங்கள் என்பது ஒரு பெரும் பொக்கிஷமாகும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவர், கீழ் ஊழியர்கள் கோள்சொல்லுவார்கள், காசு பணம் சேரும். மூட்டுவலி, தோல் வருத்தம், நரம்புச் சோர்வு, நாரிப் பிடிப்பு, அஜீரணம் என்பன வரும். தூரதேச யாத்திரைகளைத் தவிர்த்துக்கொள்ளவும். விவசாயத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறைபோன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, திங்கள், வியாழன் மத்தியானம்.*

## கும்பம்

ஒரு நாடு அந்நாட்டின் அரசியல்வாதிகளின் பக்குவத் தன்மைகளைப் பொறுத்து வளர்ச்சிபெறும். அதேபோன்று உங்களின் பக்குவத் தன்மையால் உங்கள் தொழில் பீடம் பல வளர்ச்சிகளைக் கண்டு உங்களுக்கும் உயர்ச்சிகள் கிடைக்கும். சகோதரங்களுக்கு நன்மை. வயிற்றுபாதை, கால்வருத்தம், நெஞ்சுப் படபடப்பு, மூட்டுவலி, மறதி என்பன வரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். தரகுத்துறை, போக்குவரத்துத் துறை, செய்தித்துறை, கொம்பியூட்டர் துறை, கடல்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன், சனி மத்தியானம்.*

## மீனம்

அதிர்ஷ்டக் கல் அணிந்து கொண்டால் அதிர்ஷ்டத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். அதிர்ஷ்ட எண்களில் பெயர் வைத்துக்கொண்டால் அதிர்ஷ்டகரமாக வாழலாம். தொழில் ஸ்தானத்திலும் அதிர்ஷ்டகரமாகப் பெயர்களைச் சூட்டுதலால் இலாபங்கள் பெருகி வரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். பொருள் வரும். குடும்பச் சிறப்பு, வாழ்வு ஏற்படும். மாற்றங்களால் மனத்திருப்தி வரும். சளித் தொல்லை, வாய்வுத்தொல்லை, மூலவருத்தம், நரம்பு வருத்தம் என்பன வரும். கடல்துறை, பிரயாணத் துறை, மருந்துத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன், சனி மத்தியான்ம்.*

★


# மகாதேவா ஜோதிடம்

# பச்சைத் தண்ணீரிலும் பலகாரம் சுடலாம்

காசோலை (CHEQUE) என்றால் அதுவும் பணம் போலத்தான் பணத்துககுச் சமமான பெறுமதி அதற்கும உண்டு. நான் முன்னர் ஒருசமயம் குறிப்பிட்ட பீரேதப் பெட்டிக்குள் எழுதிப் போடுகிற காசோலைகள். அதைவிடுங்கள் அதெல்லாம் வங்கிக்குப் போகாத காசோலைகள்.

காசோலைப் புத்தகங்களை வைத்திருப்பதற்கான நடைமுறைக்கணக்குகளை (CURRENT ACCOUNT) சாதாரண சேமிப்புக் கணக்குகளைத் திறப்பதுபோல யாரும் எளிதில் திறந்துவிடமுடியாது. அதற்கான தகுதிகளைத் திறக்கப் போகிறவர் வங்கிக்கு நிரூபித்தாக வேண்டும். 'காசோலைகள் மூலமாக கொடுக்கல் - வாங்கல்கள் செய்யவேண்டியுள்ளவர்கள்' என்பதுவும் அவற்றிலே ஒன்று! இந்த வகைக் கணக்குகளைத் திறப்பதற்கான கட்டுப்பாடுகள் வரவர மேலும் மேலும் இறுக்கமாகிக் கொண்டுவருவதற்கான காரணம் காசோலை மோசடிகளைக் கூடியவரை தவிர்க்கவும், காசோலைகளுக்கான மதிப்பைத் தொடர்ந்து பேணவுமேயாகும்.

முன்னரெல்லாம் எனக்குத் தெரியச் சிலர் யாராவது நன்கொடை - நிதிகள் என்றுகேட்டு நச்சரித்தால் கரைச்சல் தாளாது கடைசியில் காசோலை எழுதிக் கொடுப்பார்கள். வந்தவர் மறைந்ததும் முதல் வேலையாக குறிப்பிட்ட வங்கிக்கு குறிப்பிட்ட காசோலைக்குப் பணம் வழங்கவேண்டாம் (STOP-PAYMENT) என்று கடிதம் அனுப்பிவிடுவார்கள். இப்போதென்றால் அதைக்கூட இலேசாகச் செய்து விட முடியாது.



இதைவிடச் சிலர் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் பணத்தை வங்கிக்குப் போட்டு விடலாம் என்ற நம்பிக்கையுடன் பிற்திகதியிட்ட காசோலைகளை (POST DATED CHEQUE) கொடுப்பனவுகளுக்காக வழங்குவார்கள். பின்னர் அத்தவணையில் அப்படிப் போடமுடியாமல் காசோலை திரும்பிவிட்டால் அதற்கும் வங்கிக்குத் தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்பதுடன் அப்படியான தவறை மீண்டும் செய்தால் வங்கி அக்கணக்கையே மூடிவிடும். நடைமுறைக் கணக்கொன்றைத் தொடங்குவதே சிரமமாக இருக்கையில் அப்படி ஒரு தவறு நடைபெற யார்தாம் விரும்புவார்?

வங்கிகள் தங்களிடம் கணக்கு வைப்பதையும் - வைத்திருப்பவர்களையும் ஊக்குவிப்பதற்காக காலத்துக்குக்காலம் விதம் விதமான திட்டங்களை அறிமுகம் செய்துவருகின்றன. கணக்கில் ஒரு தொகைக்குமேல் பணத்தை நிலையாக வைத்திருப்பவர்களுக்கு பரிசுச் சீட்டுக்களில் பங்குபெறுகின்ற - பரிசுகள் பெறுகின்ற வாய்ப்பு, தவணைப் பணம் செலுத்தாமலே காப்புறுதிகளிலே இணைந்துகொள்கிற சலுகை, இப்படிப் பல... அத்துடன் வட்டிகள் வேறு... ஆனால் நடைமுறைக் கணக்குகளில் இருக்கும் பணத்துக்கு வட்டி எதுவும் இல்லை. அத்துடன் இலங்கை வங்கியைப் பொறுத்தவரை எந்தவொரு மாதத்திலாவது கணக்கில் குறிப்பிட்ட தொகை இல்லாவிட்டால் அதற்கு வேறு சேவைக் கட்டணம் (SERVICE CHARGE) என்று அறவிடுகிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியிலே ஒருவர் நடைமுறைக் கணக்கொன்றை - அதுவும் கொழும்பில் வைத்திருக்கிறார் என்றால் அவர் சாதனையாளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளவேண்டிய ஒருவராகத்தான் இருக்கவேண்டும்.

என்ன நான் வணிகக் கல்வி போதிக்கப் புறப்பட்டு விட்டதாக எண்ணுகிறீர்களா? இல்லை, ஒரு கதைதான் சொல்லப்போகிறேன். அதற்கு முன்னுரையாகத்தான் இவ்வளவையும் சொன்னேன்.

மூன்றெழுத்துப் புகைக் கொம்பனி முதலாளி ஒருவரின் வம்சாவளியில் வந்ததாகச் சொல்லிக்கொண்டு அந்த இளைஞன் கொழும்பிலே எமக்கு அறிமுகமானான். அவன் தனது மனைவி, தாயார் சகிதம் ஒரு வாடகை அறையிலே வசதியுடன் தங்கியிருந்தான். தந்தையார் மேற்படி கொம்பனியின் யாழ்.கிளைக்குப் பொறுப்பாக இருந்தவராம்.

இளைஞனும் தனது பங்குக்குச் சில சுயமுயற்சித் தொழில்களைச் செய்துவந்தான். வவுனியா, திருகோணமலை நகரிலுள்ளவர்களுக்கு வாகன ரயர்கள் வாங்கி அனுப்புவதும் அவற்றிலேயொன்று. கொழும்பு விற்பனையாளர்கள் கடன் என்று கொடுக்கமாட்டார்கள். பணம் என்று கொடுக்க முடியாவிட்டால் காசோலையாவது கொடுத்தாக வேண்டும். நம்பிக்கையானவர்கள் என்றால் பிற்திகதியிட்ட காசோலைகளையும் ஏற்றுக்கொள்வார்கள். குறிப்பிட்ட இளைஞரும் வசீகரமும் வாய்வல்லமையும் நிறைந்தவராதலால் அவருக்கும் அச்சலுகை கிடைத்திருந்தது.

'பச்சைத் தண்ணீரிலே பலகாரம் சுடுவது' என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். நல்லதொரு நடைமுறைக்கணக்கை வைத்திருப்பவரும் - அப்போதைக்குக் கைவசம் பணம் இல்லாவிட்டாலும் 'தாளை' வைத்துக்கொண்டு அப்படிச் சுடலாம். வட்டிக்குப் பணம் பெறுவதுபோல் அதைப் பிணையாகக் கொண்டும் பணம் பெறலாம்.

கொழும்பிலே காசோலை மாற்றிக்கொடுப்பவர்கள் என்று மட்டுமல்ல, பிற்திகதியிட்ட காசோலைகளுக்குப் பணம் கொடுப்பவர்கள் என்றும் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் வங்கிகள் வழங்கிய கொடுப்பனவுக் கட்டளைகளை (PAY ORDERS) நாமும் தான் அப்படி மாற்றியிருக்கிறோமே, நினைவிருக்கிறதா...?

நமது கதாநாயகனும் தெரிந்தவர்கள் அறிந்தவர்களிடம் அப்படிக் காசோலைத் தாள்கள் பெற்று சீராகத்தான் தனது வியாபாரத்தைச் செய்துவந்தார். 'சம்திங்'கைச் சந்தோசமாகக் கொடுத்து தாள்பெற்று வந்தவருக்கு திடீரென்று தானே அப்படி ஒரு கணக்குச் சொந்தக்காரனாகிவிட்டால் என்ன என்ற ஞானோதயம் வந்துவிட்டது. அடுத்து அவர் காசோலைப் புத்தகமும் கையுமாகக் காட்சியளித்தார். எழுதி எழுதிக் கிழித்தார்... கிழித்துக் கிழித்து எழுதினார். எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்றது...

திடீரென்று ஒருநாள் அவரும் அவரது குடும்பத்தினரும் காணாமற் போய்விட்டனர். எங்காவது உலாச் சென்றிருக்கலாம் என்று நினைத்தவர்களுக்கு கடைசியில் அவர்கள் கிளாலி வழியாக யாழ்ப்பாணம் சென்றுவிட்டதாகத் தகவல் கசிந்தது. காலம் செல்லச் செல்ல ஒருவர் மாறி ஒருவராக ஒற்றைச் சிலம்பினைக் (காசோலை) கையிலேந்தியவாறு ஆசாமியை விசாரித்து வரத்தொடங்கினார்கள்.

அவர்களின் ஒற்றைகளை வாங்கிப் பார்த்தால்... அவைகள் எல்லாம் பெரிய தொகைகளுக்கு அவரால் எழுதப்பட்டுத் திரும்பிய காசோலைகள்... வங்கிக் குறிப்புகளாக சிலவற்றில் வரைஞரிடம் விசாரிக்கவும் (REFER TO DRAWER) என்றும் ஏனையவைகளில் கணக்கு மூடப்பட்டது (ACCOUNT CLOSED) என்றும் எழுதப்பட்டிருந்தன.

கதையை இந்த அளவிலே நிறுத்திக்கொள்கிறேன்... என்ன, நாங்களும் அப்படி ஒரு கணக்கைத் திறந்தால் என்ன என்கிறீர்களா? அந்த அன்பரைப் போலன்றி 'பச்சைத் தண்ணீரிலே பலகாரம் சுடுவதற்காக மட்டும்' என்றால் சரிதான்.

~ சண் அங்கிள் ~

## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
## புதிய அனுமதி -2002

2002 மே மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஆயுர்வேதப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா20 செலுத்தி இக்கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூபா20இற்கு காசுக்கட்டளையை பின்வரும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி : 20.03.2002

பதிவாளர்,
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(1010)



## கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்துவ சங்கமான
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர்
திரு.செ.சுப்பிரமணியம் அவர்களின் அன்புத் தந்தையார்

### அருணாசலம் செல்லத்துரை

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அமரரின் ஆத்மா சாந்தியடைவதாக.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

*111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.* (C-20849)



## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 22 | 12 |
| 12 | 03 |
| 1942 | 1995 |

### அமரர் குப்புசாமி முருகையா

(முன்னாள் உரிமையாளர், லக்சுமிபவான் - புன்னாலைக்கட்டுவன், ஆரியபவான், கோண்டாவில் சந்தி)

*திதி:- 23.02.2002*

ஏழு ஆண்டுகள் சென்றுவிட்டதோ
உங்கள் முத்தான மொழி கேட்டு?
பிரிவால் வாடுகிறோம் உங்கள் நினைவாக.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.* (1014)

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.



## 31ஆவது நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்
## நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 19 | 24 |
| 06 | 01 |
| 1938 | 2002 |

### அமரர் பெ.விசுவநாதன்

அன்போடு எம்மை அரவணைத்தே வாழ்ந்தீர்!
எங்குதான் சென்றீர் எமைத் தவிக்கவிட்டே?

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது அன்புத் தந்தையாரின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டு எம்முடன் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் அவர் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளையில் தளரா மனவுறுதியுடனும் நம்பிக்கையுடனும் சிகிச்சையளித்த சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்களுக்கும் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்துதவிய வைத்தியசாலை வைத்தியர்கள், மருத்துவபீட மாணவர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலமாக அனுதாபந் தெரிவித்த அன்புள்ளங்கொண்ட அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (23.02.2002) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் எமது இல்லத்தில் நிகழும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று சமுகமளிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*"அல்லி மாளிகை" சுழிபுரம் மேற்கு.* (சி-20846)

*என்றும் நினைவில் வாழும்:*
மனைவி, பிள்ளைகள்.


## கசிப்பு வழக்கு; இருவருக்கு கடூழியச் சிறை

கசிப்பு உற்பத்தி செய்தமை மற்றும் அதனை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் இருவருக்கு யாழ்.நீதிமன்றம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கட்டைப்பிராயைச் சேர்ந்த தம்பிப பிள்ளை நாகேந்திரன் என்பவருக்கு 40ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு மன்றினால் உத்தரவிடப்பட்ட போதும் அதனை முழுமையாகச் செலுத்தாத குற்றத்துக்காக 2 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக கப்பட்டது.

ஆனைக்கோட்டை, சாவற் கட்டைச் சேர்ந்த சமரதுங்க சமரபாலா என்பவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு மன்றினால் உத்தரவிட்டபோதும் அதனைச் செலுத்தாத குற்றத்துக்காக 6 மாதம் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (க-10)

## ஒடியல் வகைகள் கொள்வனவு

யாழ்ப்பாணம்,பெப்.23

பனை அபிவிருத்திச் சபையால் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து புழுக்கொடியல் மற்றும் பச்சை ஒடியல் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒடியல் வகைகளை விற்பனை செய்ய விரும்புபவர்கள் தமது பொருள்களின் மாதிரியுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.23

கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றத்தினரால் இன்று நடத்தப்படவிருந்த "இலங்கையில் கல்வி முறையும் வேலை வாய்ப்புக்களும்" என்ற கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் இன்றும் நாளையும் நடத்தப்படவிருந்த கலாசார விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

★ ★ ★

பன்னாலை சேர்கனகசபை அ.த.க. பாடசாலையில் இன்று நடைபெறவிருந்த மெய்வன்மைப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## தேர்தல் ஏற்பாடு யாவும் பூர்த்தி

எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான சகல ஆரம்ப ஏற்பாடுகளையும் யாழ்.மாவட்ட தேர்தல் அலுவலகம் துரிதமாக மேற்கொண்டு வருவதாகத் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ வாக்காளர்கள் அட்டைகள் யாவும் எதிர்வரும் 8ஆம் திகதியும் தபால் மூலவாக்காளர்களின் வாக்குச் சீட்டுக்கள் எதிர்வரும் முதலாம் திகதியும் உரியவர்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் சொன்னார். (க-180-ரி)


## இலவசமாக தென்னம்பிள்ளைகள் விநியோகம்

தென்மராட்சி மக்களுக்கு உயர்ரக தென்னம்பிள்ளைகள் யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்படவுள்ளன. தென்னம்பிள்ளைகளைப் பெறவிரும்புவோர் சம்பந்தப்பட்ட வரணிபிலுள்ள விவசாய சம்மேளனம் ஊடாக அல்லது சிபாரிசுடன் கீழே உள்ள விலாசத்துக்கு உடன் விண்ணப்பிக்கவும்.

சி.துரைராசா
தலைவர்,
இடைக்குறிச்சி விவசாய சம்மேளனம், வரணி.

(1015)



## இறும்பூதெய்துகின்றோம்

### திரு. வ. செல்வராசா

*(தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்)*

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை IIக்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரை எமது உளங்கொண்டு வாழ்த்தி மகிழ்வதோடு, எல்லாம்வல்ல சக்தி துணையுடன் மேலும் பதவி உயர்வும், வளமும் பெற்று வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

- அம்சன் ஒளியக நண்பர்கள்.

*நெல்லியடி, கரவெட்டி.* (சி-20847)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## 'தருண அருண' கொழும்பு நிறுவனத்தில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறிகள்

'தருண அருண' (கொழும்பு) நிறுவனத்தில் திறன் அபிவிருத்திப் பயிற்சி நெறிக்காகப் பதிவுசெய்து 'தருண அருண' (கொழும்பு) நிறுவனத்தின் பதிவு இலக்கங்களைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரிகளுடன் திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறி வழங்குவது சம்பந்தமாக சில பிரச்சினைகள் இருப்பதனால் அது சம்பந்தமான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்பதாக தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி தொழில்வழிகாட்டுநர் அலுவலகப் பணிப்பாளரினால் வேண்டப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
*யாழ்.பல்கலைக்கழகம்.* (சி-20848)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 26 | 05 |
| 11 | 03 |
| 1947 | 2001 |

### திருமதி சசிகலா கோபாலரட்ணம்

எமது அன்புத் தெய்வமே! நீ அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் இருந்து காலம் எல்லாம்
எம் வாழ்விற்காக வாழ்ந்தீர்! காலனும் உம்மைக்
கடவுளுடன் இணைத்தான்.

(1018)

*கோ.சித்திரகுமாரன், 49/A,சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்
தாய், கணவர்,
மகன், மகள், மருமகன், மருமக்கள்.



உ

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் மாசி மாதம் 12ஆம் நாள் நாளை (24-02-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 7.55 மணி முதல் 8.50 மணி (புதிய நேரம்) வரையுள்ள புனர்பூச நட்சத்திர மீதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி

### தர்சினி அவர்களுக்கு

பூப்புப்புனித நன்னீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(1017)

நிறஞ்சன் நகைமாடம்,
'நிர்மலா வாசா'
சந்தை வீதி, உடுப்பிட்டி.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.இ.விக்னேஸ்வரன்
திருமதி நிர்மலாதேவி குடும்பத்தினர்.

# குடாநாட்டுக்கான வீதிகளைத் திறக்க அமைச்சரவை உபகுழு சிபாரிசு

கொழும்பு,பெப்.23

வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து குடாநாட்டுக்குப் பொதுமக்கள் சென்று வர வசதியாக நாகர்கோவில் வீதி, எழுதுமட்டுவாழ் வீதி ஆகியவற்றை திறக்கும்படி அமைச்சரவை உப குழு அரசுக்குச் சிபார்சு செய்துள்ளது.

அமைச்சர் ரி.தயாரத்ன தலைமையில் கூடிய வடக்கு அத்தியாவசியப் பணிகளுக்கான உபகுழுவே இந்தச் சிபாரிசைச் செய்துள்ளது.

இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களான ஜயலத் ஜயவர்த்தனா, தி.மகேஸ்வரன், லஷ்மன் செனவிரத்ன, பியசோம உபாலி, சாகர ரத்நாயக்க, மிலிந்த மொறகொட ஆகியோர் இந்த உபகுழுவின் கூட்டத்தில் பங்குபற்றினர்.

வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டது. பின்வரும் சிபாரிசுகள் அரசுக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

★ யாழ்.மாவட்டத்தில் மின்சார விநியோகத்தைச் சீராக்க காங்கேசன் சிமெந்து நிறுவனத்தின் மின் நிலையத்தை இயக்குதல். அதற்கு 4 கோடி ரூபா வழங்குதல.

★ சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் 600 பேரை அடுத்த 40 நாள்களில் விடுதலை செய்யவேண்டும். அந்தப் பணியை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கவேண்டும்.

★ வடக்கு - கிழக்கில் உடனடியாக 3ஆயிரம் ஆசிரியர்களை நியமித்தல். ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு நிலுவைகளை வழங்கல்.

★ வடபகுதியில் பணிபுரியும் டாக்டர்களுக்கு விசேட மேலதிக கொடுப்பனவை வழங்கவேண்டும்.

★ யாழ்ப்பாணத்துக்குப் புதிதாக 20 பஸ்களை அனுப்புதல். பழுதடைந்த பஸ்களுக்கான உதிரிப்பாகங்களை உடன் அனுப்புதல்.(ஐ-3)

# பிரபாவை இலங்கை ஒப்படைக்குமென இந்தியா இப்போதும் காத்திருக்கிறதாம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் விசாரணைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தம்மிடம் ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கான இலங்கையின் பதிலுக்காக இப்போதும் இந்தியா காத்திருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் இந்திய அரசின் மத்திய புலனாய்வு அமைப்பின்(சி.பி.ஐ.) இயக்குநர் பி.சி.சர்மா.

இன்ரபோலின் 17ஆவது ஆசிய மாநாட்டில் கலந்துகொள்ளக் கொழும்பு வந்துள்ள பி.சி.சர்மா செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

காலத்துக்குக் காலம் இராஜதந்திர வழிகள் ஊடாக தொடர்ந்து இந்தியாவின் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் -

பிரபாகரனை ஒப்படைப்பது குறித்து இலங்கை அரசே தீர்மானிக்கவேண்டும் என்றும் -

சர்மா மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சம்பந்தப்பட்டுள்ள அமைதி முயற்சியில் பிரபாகரனைக் கையளிக்கும் விவகாரம் ஏற்படுத்தக்கூடிய சிக்கல் பற்றி கருத்துக் கூற அவர் மறுத்துவிட்டார்.

சி.பி.ஐ. கையாளும் வழக்குகளில் ஒன்றுக்குத் தேவைப்படும் நபராக மட்டுமே பிரபாகரனைக் கருதுவதாகவும் -

மற்றைய விடயங்களை அரசியல் தலைவர்கள்தான் தீர்மானிக்கவேண்டும் என்றும் -

சி.பி.ஐ. இயக்குநர் கூறினார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமும் ஆதரவும் வழங்கி வருகிறது இந்திய அரசு.

அதேவேளை ராஜீவ் காந்தி கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று கூறி பிரபாகரன், புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், பெண்கள் அணித் தலைவி அகிலா ஆகியோரை சி.பி.ஐ. தேடி வருகிறது. (ஒ)

# துன்புறுத்துவோருக்காகச் செபிப்போம்

## தவக்காலச் சிந்தனை

### பதினோராம் நாள்

எமது அன்றாட அனுபவங்கள், நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பொறுத்து மிகவும் அழகானவையாகவும், மதிப்புமிக்கவையாகவும் அமைந்திருக்கும். இவையே எம்மை புடமிடுபவையாகவும், பக்குவப்படுத்துபவையாகவும் இருப்பன என்பதில் ஐயமில்லை.

இன்று எம் மத்தியில் துன்புறுத்தல்கள் தலைதூக்கியுள்ளன. கணவனால் மனைவியும், பிள்ளைகளால் பெற்றோரும், காதலனால் காதலியும், இளைஞர்களால் பெண்களும், பெரியோரும் துன்புறுத்தப்படுவது எம் நிஜங்களாக மாறிவரும் கலியுகக் காலம் இது.

மனித வாழ்வு நீர்க்குமிழி போன்று கண்ணிமைப்பொழுதில் மறைந்துவிடும் என்பதை மனிதம் நினைக்கத் தவறுகிறது. கசப்புணர்வுகளும், காழ்ப்புணர்வுகளும், பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்ற வேட்கையும் எம்மிடையே மலிந்துபோய்விட்டதை யாருமே மறுக்கமுடியாத நிலையாகிவிட்டது. போராட்டங்கள் எம்மில் பல காயங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஆன்மீகத்தை உதறித் தள்ளிவிட்டு பிழையான வழியில் செல்வதால் பயன் என்னதான் உண்டு? இன, மத, சாதி, பால் ரீதியான வக்கிரம் நிறைந்த மனிதராகவே வாழ பலர் விரும்பாமல் விரும்பி நிற்கும் காலம் இது. ஏகாதிபத்தியவாதத்தால் சொந்த நாட்டு மக்களும், பெரும்பான்மையினரால் சிறுபான்மையினரும் துன்புறுத்தப்பட்டதை நாம் அனைவருமே அனுபவித்து வருபவர்கள். பகைவருக்கு அன்பு செய்வதும், துன்புறுத்துவோருக்காக செபிப்பதும் இன்று எம்மால் இயலாத காரியமாக உள்ளது. இது உண்மையே. பகைவரை வெறுப்பதால் நாம் என்ன ஒரு முழம் வளர்ந்து விடுகிறோமா?

'தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை' (லூக் 23:34) என்று தன்னைத் துன்புறுத்தியவர்களுக்காகப் பரிந்து பேசி யேசு உயிர் நீத்தார். இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சியாகத் திகழ்ந்த திருத்தொண்டர் இஸ்தேவான் கல்லால் எறிந்து கொல்லப்படும்போது முழந்தாள் படியிட்டவராக 'ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்' (திரு.தூ.பணி7:60) என்று சொல்லி உயிர்விட்டார் பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பர்.

இளைஞன் ஒருவனால் சுடப்பட்டுப் பின்னர் தனது சிகிச்சை முடிந்து, சிறைச்சாலைக்குச் சென்று, அவரை மன்னித்தது இன்றைய வாழ்வில் எமக்குப் பெரும் சவாலாகவே அமைந்துள்ளது.

எனவே போராட்டங்கள் தனி மனித வாழ்வில், குடும்பத்தில், சமூகத்தில், நாட்டுக்கு நாடு காணப்படுகின்றன. இந்தப் போராட்டம் ஆதியிலேயே உருப்பெற்றுவிட்டது. கடினமான உள்ளங்கள் இருளின் பாதைக்கே அடிமையாகின்றன. ஆகவே எம்மத்தியில் ஏற்பட்டுள்ள வகுப்புவாதங்களைக் களைந்து கிறிஸ்தவ விழுமியம் எம் மத்தியில் மலர வழி வகுப்போம். அன்பு எங்கு நிலைநாட்டப்படுகிறதோ அங்கேதான் கிறிஸ்தவம் வாழப்படுகிறது. கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்தால் அவர் கூறியபடியே நாம் அவருக்குச் சொந்தமான மக்களினமாய் இருப்போம்.

**செல்வி டெவ்லின் ஞானப்பிரகாசம்,**
*மானிப்பாய்.*

## இன்றும் நாளையும் நடைபெறவுள்ள

# சமாதானத்தை வலியுறுத்தும் பாதயாத்திரைக்கு சமய நிறுவனங்கள், பொது அமைப்புகள் ஆதரவு

## தமிழினத்தின் ஏகோபித்த குரலை வலுப்படுத்த திரண்டு வருக!

யாழ்ப்பாணம்,பெப்.23

சமாதான முயற்சிகள் வெற்றி பெற்று நாட்டில் நிலையான சமாதானச் சூழல் ஏற்படவேண்டும் எனக் கோரி இன்றும் நாளையும் நடத்தப் படவுள்ள பாதயாத்திரைக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு சமய அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகள் பத்திரிகைச் செய்திக் குறிப்புக்களை விடுத்துள்ளன.

சமய நிறுவனங்களும் அவை விடுத்த அறிக்கைகளும் வருமாறு:

**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**

**சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள்**

இன்றும் நாளையும் நடைபெறுகின்ற பாதயாத்திரையானது காலத்தின் தேவையை ஒட்டிய அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். சர்வமதங்களும் இதில் ஒன்றிணைந்து இருப்பது வரவேற்கத்தக்கது. அத்தகைய மதபீடங்களுடன் சகல பொதுஜன அமைப்புகளும் அணிதிரள்வது மிகசிறந்த அம்சம். தமிழினத்தின் ஏகோபித்த குரல் சமாதானமே என்பதை இந்த பாதயாத்திரை வலியுறுத்துவதாக அமைகின்றது.

"சமாதானத்துக்கான யுத்தம்" என்ற பழைய கோஷங்கள் முடங்கி விட்டன. சமாதானத்துக்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு எதையும் செய்யத் தயாராகிவிட்டோம் என்ற உறுதியை இந்த பாதயாத்திரை அகில உலகிற்கும் எடுத்துக்காட்டட்டும். வெண்ணெய் திரண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் தாழியை உடையவிடாமல், நிலைத்த ஒரு சமாதானத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்க இந்தப் பாதயாத்திரை உதவட்டும் என ஆசி கூறி நிற்கின்றேன்.

**அகில இலங்கை சைவ குருமார் அர்ச்சகர் சபை**

சமாதானப் பிரியர்கள் சாதி, மத, இன, கட்சி வேறுபாடின்றி ஒழுங்கு செய்துள்ள பாதயாத்திரை இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றது.

இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மொழி, சமூக, கலாசாரப் பண்பாடுகளில் பாரம்பரியமாக பிணைக்கப்பட்டவர்கள் என்பதை சரித்திரப் புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன. இங்கு வாழும் மக்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகளே. அவர்கள் எந்தப் பகுதியிலும் சுதந்திரமாக வாழ உரிமையுடையவர்கள். எனவே அதற்கான வழிவகைகள் முன்னெடுக்கப் படவேண்டும்.

எல்லா மதங்களும் சமாதானத்தையும், புரிந்துணர்வையும் வலியுறுத்துகின்றன. பல வருடங்களாக தமது சொந்த ஊரைவிட்டு இடம் பெயர்ந்து அல்லலுற்று, தொழிலின்றி, வாழ வதிவிடமின்றி, அடிப்படை வசதிகளின்றி அகதிகளாக வாழும் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும். இதற்குப் பாதயாத்திரை வழிசமைக்கட்டும்.

**வண. செ.பீ.நேசகுமார்**

**குருமுதல்வர்**

**இலங்கைத் திருச்சபை**

சகல இன மக்களும் நீதியுடன் கூடிய சமாதான வாழ்வு உருவாக்கப் படவேண்டிய காலகட்டத்தினுள் வாழ்ந்துவருகின்றனர்.

எமது எதிர்கால சந்ததியினர், உருக்குலைந்து காணப்படும் தேசத்தைவிட்டுச் செல்லாது, மக்களாகிய நாம் இன்று முழு உலகிற்கும் சமாதானத்தின் தேவையை உணர்த்த முன்வரவேண்டும்.

சமாதான பாதயாத்திரை எமது தேசத்தின் - சகல இன மக்களின் அமைதிக்கும் சமாதானத்துக்குமான அடையாளமாக அமையவேண்டும். அமைதிப் பேச்சு, சமாதான முயற்சிகளுக்கான தடை, தாமதம் இவற்றை துரிதப்படுத்தி இன்னலுறும் எமது தேசத்து மக்களுக்கு விடிவும், சமாதானமும் விரைவில் கிடைக்கவேண்டி நடத்தப்படும் இப்பாதயாத்திரையில் அனைவரையும் பங்குபற்ற அழைக்கின்றேன்.

ஒரே சிந்தை, நோக்கு, அமைதி கொண்டுநடத்தப்படும் இப்பாதயாத்திரை நிச்சயமாகவே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

**அருட்திரு அ.ஜீவேந்திரா போல்**

**முதல்வர்**

**யாழ்.அமலமரித்தியாகிகள் சபை**

நாட்டிலே முன்னெடுக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படுகின்றன. நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகின்றன. இம்முயற்சிகள் வெற்றிபெறவும், அவை சமாதானத்தில் பூரணம் பெறவும் வேண்டி, சர்வ மதத்தினரும் இன்றும் நாளையும் சமாதானத்திற்கான பாத யாத்திரையினை மேற்கொள்கின்றனர்.

காலத்தின் அழைப்பிற்கான இந்த விருப்பு, வெளிக்காட்டல் நல்லதொரு பதிலளிப்பாகும். சமாதானம் செய்வோரின் கரங்களைப் பலப்படுத்தவும், வன்முறைச் சக்திகளை விலக்கிக்கொள்ளவும் இந்த ஆன்மீக சாத்வீக யாத்திரை வழி சமைக்கும் என்பது எம் எதிர்வு கூறல்.

இந்த நல்ல முயற்சியில் சகல மக்களும் பங்களிப்புச் செய்து சமாதானத்திற்கான விருப்பினை மீண்டும் ஒருமித்து ஓங்கி ஒலிக்கச் செய்வோம்.

### பொது அமைப்புகள் விடுத்துள்ள அறிக்கைகள்:

**யாழ்.வணிகர் கழகம்**

கடந்த இருபது ஆண்டுகாலமாக நடைபெற்று வரும் யுத்தமும் அதனால் ஏற்பட்டுள்ள இராணுவக் கெடுபிடிகளும் அனர்த்தங்களும் தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளன. தற்போது பதவி ஏற்றுள்ள அரசு சமாதானப் முயற்சிகளில் இறங்கியுள்ள இவ்வேளையில் தென் பகுதியில் அதற்கு முட்டுக்கட்டை போட ஜே.வி.பி.போன்ற கட்சிகளும் அமைப்புகளும் செயற்பட்டுவருவது வருந்தத்தக்கது.

சமாதானத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் மக்கள் போராட்டங்கள் தேவை என்பதற்கு அமைய சர்வ மதங்களும் இணைந்து சமயத் தலைவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாதயாத்திரையிலும் பிரார்த்தனைகளிலும் சகல வர்த்தகப் பெருமக்களும் கலந்துகொண்டு இப்போது எமக்கு சமாதானமே வேண்டுமென்று ஒருமித்த குரல் கொடுக்கவேண்டும்.

**யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியம்**

தமிழ் மக்களும் சிங்களமக்களும் சமாதானத்தை விரும்பி இருக்கின்றனர். இதன் வெளிப்பாடாகவே புதிதாகப் பதவி ஏற்றுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இதற்கான சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்தவேளையில் ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற பேரினவாத சக்திகள் இத்தகைய சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்மக்கள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை சர்வதேச உலகுக்கு வெளிக்காட்டவும் இத்தகைய சமாதானத்துக்கான செயற்பாடுகள் அவசியமானவை.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நடத்தப்படும் பாதயாத்திரையில் அனைத்து உயர்தொழில் நுட்ப மாணவர்களும், ஏனைய மாணவர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

**தேசிய கலை இலக்கியப் பேரவை**

சமாதானத்துக்கான மக்களின் ஆணையை ஏற்று பதவிக்கு வந்த அரசு, விடுதலைப்புலிகளுடன் சமாதானத்துக்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டுவரும் இவ்வேளையில், சிக்கலான நெருக்கடி மிகுந்த இப்பயணத்தில் மக்களும் தமது உறுதிப் பாட்டையும் ஆதரவையும் தொடர்ந்து தெரிவிக்க வேண்டிய தேவை உள்ளது.

அரசியற் தீர்வுக்கும், சமாதானத்துக்கும் எதிரான சக்திகள் பல முனைகளில் இருந்தும் செயற்பட்டு வரும் இச்சூழலில் சமாதானத்துக்கான பாதயாத்திரை போன்ற மக்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் நடவடிக்கைகள் அவசியமானவை.

சுயநிர்ணய அடிப்படையிலான நீதியான அரசியற் தீர்வே இனப் பூசலற்ற வாழ்வுக்கும், நிரந்தர சமாதானத்துக்கும் வழிவகுக்கும். இதனை வலியுறுத்தி தமிழ்மக்கள் மட்டுமல்ல, சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் உட்பட அனைத்து மக்களும் இன,மத வேறுபாடின்றி தமது சமாதானத்துக்கான உறுதிப்பாட்டை தொடர்ந்து வெளிப்படுத்வேண்டும்.

**ஈழத்தமிழர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகம்**

மலரப்போகின்ற சமாதானத்துக்காக ஒவ்வொருவரும் துணை நிற்போம். நிரந்தர போர்நிறுத்தத்திற்காக, இருபது வருட காலப் போருக்கு முடிவு கட்ட, நடைபெறவிருக்கும் நல்லதோர் சுமுகமான இருதரப்புப் பேச்சுகள் வெற்றிபெற அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

நாங்கள் ஒவ்வொருவரும் அழகான இலங்கைத்தீவிலே சகோதரர்களாக இன, மத ஐக்கியத்துடன் ஒற்றுமையாக வாழ விரும்புவோம். காலாகாலமாக ஈழத்தமிழ் நிலமெங்கும் பெருகி வருகின்ற அவல வாழ்வுக்கு சாவுமணி அடிப்போம். நிரந்தர உரிமையை நீதியோடு கூடிய சமாதானத்தை விரைவில் காண்போம்.

நல்ல தருணம் நமக்கு வழிகாட்டியிருக்கின்றது. வாருங்கள் எம் தேசத்து மக்களின் நலனுக்காக, அவர்கள் இம்மண்ணில் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ எல்லோரும் இறைவனை வேண்டி இப்புனிதப் பணியில் கலந்துகொள்வோம்.

☆ ☆ ☆

ஏழாலை திரானமணி மண்டப நிர்வாகத்தினரும் பாதயாத்திரையில் அனைத்து மக்களும் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

(க-7)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருமண சேவை

கம்பியூட்டர் மூலம் உங்கள் சாதகங்கள் மிகத் துல்லியமான முறையில் கணித்துக்கொடுக்கப்படும். அத்துடன் எண், கிரகபலன், திருமணப் பொருத்தம் என்பன பார்க்கப்படும். நேரம்: காலை 8.30 -11.00, மாலை 3.00 - 6.00. தொடர்பு: நா.கந்தையா, சதுர்ஷிகா ஜோதிட நிலையம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (787)

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடையவேண்டுமா? கணிதம் கற்பித்தலில் 40வருடங்களுக்கு மேல் அனுபவம்வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L, 10,9,8,7,6 தரங்கள். இல.8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி (மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்). (C/20798)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. மருத்துவர்கள், மருத்துவ குடும்பம், நிறுவனங்கள் விரும்பத்தக்கது. யாழ்.மேற்றாசனக் கோயிலுக்கு அண்மையில் ஆயா இல்லத்திற்கு சமீபமாக. தொடர்பு: விள.இல.1469, மே/பா உதயன். (998)

## தவறிவிட்டன

சிறீஸ்கந்தராசா தமயந்திதேவி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.526473245V), விசேட அடையாள அட்டை (0908012829) என்பன அடங்கிய "பேர்ஸ்" 17.02.2002 அன்று யாழ். போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.சிறீஸ்கந்தராசா, C/o Dr. A.தங்கராஜா, "ஈஸ்வரி பவனம்", கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (1003)

பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியைச் சேர்ந்த த.கிருஷ்ணராசா என்பவருடைய தேசிய அ.அ. (இல.670791670V), விசேட அ.அ. (இல.0902002125), வேலை அ.அட்டை என்பன 20.02.2002 அன்று நல்லூருக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (1004)

சங்கானை மேற்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த நா.சுதந்திரராசா புஸ்பமாலா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.748433455V), விசேட அடையாள அட்டை (இல. 090403245) என்பன 19.02.2002 அன்று யாழ்.ஆஸ்பத்திரி சுற்றாடலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (1006)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (886)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.றஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (776)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வெ.சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய். (876)

## விற்பனைக்கு

பிறிமா இன வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளுக்கு பதிவு செய்தவர்களும், தேவைப்படுவோரும் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு: வி.குணபாதன், இல.4., கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T,P:3353 (1011)

Broiler, Culled Birds மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. இல.123, அம்பலவாணர் வீதி, அத்தியடி. இல.52, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (1007)

புதிய SONY (JAPAN) ED 1 டெக், PANASONIC ஓடியோ CDசெற், PANASONIC (NV-SD235) டெக் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.நந்தசீலன், பிப்பிலிச் சந்தி, மானிப்பாய். (967)

நான்கு மாத சினையுடன் நான்கு குட்டியோடும் ஆடு மற்றும் புதிய நாய்க்கூடு, கோழிக்கூடுகள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறுகளில்: தொடர்பு: 75, செட்டித்தெரு, நல்லூர். (980)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினைப் பகுதியில் 71/2 பரப்புக்காணி, கிணறு, வீடு மற்றும் தோட்டக்காணி (12 பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தம்பிராசா இராசரத்தினம், குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (974)

நல்ல நிலையில் உள்ள வீடியோ புறொஜெக்டர் விற்பனைக்கு உண்டு. உயர் கல்வி நிறுவனங்கள், மினி சினிமாக்களுக்கு ஏற்றது. தொடர்பு: கு.விக்னேஷ், 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C-20838)

புதிய கண்ணாடிக் கதவு போடக்கூடிய 8x8 அடி, 2 கடை றாக்கைகள விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே.நவரத்தினவேலு, டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (1012)

DACHS-HUND 6 மாத வயதுடைய சுத்த இன கறுப்பு மண்ணிற ஆண் நாய்க்குட்டி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மனோன் மாஸ்ரர் அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (1009)

## சபையில் கூட்டணி ஈ.பி.டி.பி. மோதல்

ஈபிடிபி எம்பிக்கள் நடராசா மதனராஜன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச சேர்ந்த ரவிராஜ் எம்.பி.க்கும் இடையில் சூடான சொற்போர் இடம்பெற்றது. நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உறுப்பினர்கள் பேசிய நேரத்தைவிட கூச்சலும் குழப்பமும் ஏற்பட்ட நேரமே அதிகமாக இருந்தது. (க)

## திருமணப் பொன்விழா வாழ்த்து

23-02-2002



திரு.திருமதி

**பொன்னு தம்பிராசா பவுலீனம்மா** (நேசமணி)

தம்பதிகள் நல்லறமாம் இல்லறத்தில் இனிதே இணைந்து இன்று (23-02-2002) சனிக்கிழமை மங்களகரமாக பொன்விழா காண்பதையிட்டு இருவரும் வாழ்வில் வளமெல்லாம் நிறைவுடன் பெற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமாய் வாழவேண்டும் என்று மனமார வாழ்த்துவதோடு புனித அடைக்கல அன்னையின் துணையையும் வேண்டி நிற்கின்றோம்.

வாழ்க நீடூழி!

வாழ்த்துவோர்:
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, உறவினர்கள்*

*21, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.* (1002)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

பிறப்பு 03 - 10 - 1917



இறப்பு 24 - 01 - 2002

## மாணிக்கம் நாகம்மா

அன்புமிக்க தாயாகவும்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய்
பிரகாசித்த தெய்வமே!
எம்மை விட்டு மறைந்து
இறைவன் தாள்களிலே.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

*பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*82/17, பருத்தித்துறை றோட், 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (994)

---

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## 2002ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

2002ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் இன்று (23.02.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு (புதிய நேரம்) யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறும். சகல கழக அங்கத்தவர்களும் 23.02.2002 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி பொதுச்சபைக் கூட்டத்தில் தவறாது பங்குபற்றி வலுவான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி, வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்வோம்.

*இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.* - யாழ்ப்பாணம் வணிகர் கழகம். (சி-20839)

---

சிவமயம்

## அகில இலங்கை இந்து மாமன்றம்

### முதியோர் இல்லம் - அனுமதி

இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியின் பின்பக்கத்திலுள்ள காணியில் நிறுவப்பட்டுவரும் முதியோர் இல்லம் எதிர்வரும் சித்திரை மாதம் அளவில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது. இதில் சேரவிரும்புவோர் அதற்கான விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்திலிருந்து நேரிலோ, தபால் மூலமாகவோ பெற்று 09.03.2002ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### மாணவர் விடுதி - அனுமதி

இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியில் படிக்கும் அல்லது படிக்க விரும்பும் 10 வயதுக்கு மேற்படாத ஆதரவு தேவைப்படும் மாணவிகள் இலவச விடுதியில் அனுமதி கோர விரும்பினால் அதற்கான விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்திலிருந்து நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பெற்று 09.03.2002ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொதுச் செயலாளர்**
அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2.
தொலைபேசி: 434990
தொலை நகல்: 344720

(C/20845)

---

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### க.சி.நமசிவாயம்

*(கௌரவ செயலாளர், யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம்)*

யாழ்.மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் செயலாளராக 1992ஆம் ஆண்டிலிருந்து இறைவனடி சேரும் வரை (08-02-2002) சிறந்த சேவையாற்றியதுடன், வேறு பல சமூக அமைப்புகளிலும் பணியாற்றியவரும், ஓய்வுபெற்ற நில அளவையாளரும், சமூகத் தொண்டருமாகிய அமரர் க.சி.நமசிவாயம் அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு.ஆ.கோபாலமூர்த்தி, பதில் செயலாளர்.
திரு.ஈ.எஸ்.விஜயராசசிங்கம் J.P. பொருளாளர்.
திரு.எஸ்.ஆர்.சண்முகரத்தினம் தலைவர்.

*62/1, செட்டித் தெரு, நல்லூர்.* (945)

---

கணபதி துணை

## உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்,

சுபஸ்திஸ்ரீ மங்களகரமான விஷ° வருஷ மாசித் திங்கள் 12ஆம் நாள் நாளை (24.02.2002) ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும், துவாதசித் திதியும் கூடிய காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரையுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

*மாதகலைச் சேர்ந்த*
பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிக் குருக்கள் ரதிரூபா தம்பதிகளின் பௌத்திரனும்

*அளவெட்டி அழகொல்லையைச் சேர்ந்த*
பிரம்மஸ்ரீ இரத்தின ஐயர் மனோன்மணி அம்மா தம்பதிகளின் பௌத்திரனும்

*எமது புத்திரன்*
**சிரஞ்சீவி உமாபிரசாத் சர்மாவுக்கு**

யக்ஞோபவீததாரணபிரம்மோபதேசம் செய்துவைப்பதற்கு எல்லாம்வல்ல அழகொல்லை விநாயகப்பெருமான் துணைகொண்டும் காஞ்சிப்பெரியவர் அனுக்கிரகத்துடனும் காயத்திரி பீடாதிபதி ஞானபாஸ்கர மஹாதேவக் குருக்களின் ஆசியுடனும் நிச்சயிக்கப்பெற்று அழகொல்லை விநாயகர் ஆலயத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகைதந்து சபையைச் சிறப்பித்து எமது குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*அழகொல்லைப் பிள்ளையார் கோயிலடி, அளவெட்டி.*

தங்கள் நல்வரவை நாடும்:
(993) இ.மகாலிங்கக் குருக்கள் - மதிவதனி தம்பதிகள்.

# கப்பல் பயணிகள் இனி நேரடியாக தெல்லிப்பழைக்குச் செல்ல வேண்டும்

## அடுத்த வாரம் முதல் புதிய நடைமுறை அமுல்

யாழ்ப்பாணம்,பெப்.23

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம்செய்யப் பயணச் சீட்டுப் பெறும் பயணிகள் இனிமேல் தெல்லிப்பழைக்கு நேரடியாகச் செல்ல வேண்டும் என்று கப்பல் முகவர் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தப் புதியமுறை எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது.

இதுவரை காலமும் பயணிகள் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்துப் பட்டியல் இடப்பட்டு பஸ்கள் மூலம் தெல்லிப்பழைக்கு அழைத்துச்செல்லப்பட்டுவந்தனர். அங்கு வைத்து அவர்கள் சோதனை செய்யப்பட்ட பின்னர் கப்பலுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

இந்த நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. இனிமேல் தெல்லிப்பழையில் வைத்தே பயணிகள் பட்டியல் இடப்படுவர். அவர்களின் உடைமைகளும் அங்கேயே சோதனைசெய்யப்படும். பயணிகள் நேரடியாகத் தெல்லிப்பழைக்குச் சென்று, தமது பயணத்தை மேற்கொள்ளமுடியும் என்று கப்பல் முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ-3)

## 7 ஈழத்தமிழர்கள் அகதிமுகாமில் கைது!

இராமேஸ்வரம் மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்த ஏழு இலங்கைத் தமிழர்களை புலனாய்வுத் துறையினர் கைதுசெய்து செங்கல்பட்டில் அகதிகள் சிறப்பு முகாமிற்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு சென்றனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் அங்கு தங்கியிருந்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த 7 பேரும் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே புலனாய்வுத் துறையினர் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் விஜயதாசன் (வயது 25), நிடீகன் (வயது 30), வேகாவனம் (வயது 25) ஆகிய மூவரும் அடங்குகின்றனர். (ஐ-9)

## கலண்டர்விநியோகம

இலங்கைத் தமிழா ஆசிரியர் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள கலண்டர்களை இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூரில் உள்ள சங்க அலுவலகத்தில் பெற்று, அவற்றை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கும்படி கிளைகளின் செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.(ஐ-3)

---

### யாழ்ப்பாண மாநகரசபை
### வரியிறுப்பாளர்களுக்கான வேண்டுகோள்

தங்கள் வீடுகளில் அன்றாடம் சேரும் குப்பைகள் மற்றும் கழிவுகளை வீதியோரங்களில் குவிப்பதனால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறும் சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுவது பற்றி எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர்க்கும் முகமாக மேற்படி கழிவுகளைத் தங்களது வளவுகளுக்குள் புதைப்பதன் மூலம் அவற்றைப் பசளையாகப் பயன்படுத்தலாம். ஆதலினால் அனைத்து வரியிறுப்பாளர்களும் இம்முறையினையே தவறாது கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வாகனப் பற்றாக்குறை காரணமாக வீதியோரங்களில் குவிக்கப்படும் வீட்டுக் குப்பைகளை அகற்றும் பணியை முன்னரைப்போன்று செயற்படுத்த முடியாதுள்ளது. இதனால் எமது மேற்படி வேண்டுகோளுக்கு மாறாக வீதியோரங்களில் குப்பைகளைக் குவிப்போரிடமிருந்து தகுந்த கட்டணம் அறவிட்டு, அவற்றை அகற்ற வேண்டிய நிர்ப்பந்தம் சபைக்கு ஏற்படுமாதலால் அவ்வாறான நிலைமையைத் தவிர்த்து, தத்தமது ஆதனங்களுக்குள்ளேயே அன்றாடம் சேரும் குப்பை கூளங்களைப் புதைத்து அல்லது குவித்துவைத்து பசளை ஆக்குவதன்மூலம் சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இ.இராமலிங்கம்,
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

*22.02.2002.* (C/20854)

---

### யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
### வல்வெட்டித்துறை

**விளையாட்டுப்போட்டி பிற்போடப்பட்டமை பற்றிய அறிவித்தல்**

**இன்று (2002.02.23) சனிக்கிழமை நடைபெற இருந்த விளையாட்டுப்போட்டி, தவிர்க்கமுடியாத காரணங்களினால் 2002.02.27 புதன்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**

**இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு மிகவும் மனம்வருந்துகின்றோம்.**

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

(1033)

---

### கண்ணீர் அஞ்சலி

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பிகையின் பரம்பரை அறங்காவலர் வழித்தோன்றலும் வட கிழ. மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.க.பரமலிங்கம் அவர்களின் பேரன்புச் சகோதரருமான

**நமசிவாய அடியார் க.மகாலிங்கம்**

அவர்களின மறைவு அறிந்து எமது துயரையும் கண்ணீர் அஞ்சலியையும் சமர்ப்பிப்பதுடன் அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் செயலாளருக்கும் எமது சபையின் ஆழ்ந்த அனுதாபத்தையும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அமரரின் ஆத்மா சாந்தி அடைவதாக!*

*நெடுந்தீவு பிரதேச சபை.*

தலைவர்,
உறுப்பினர்கள்,
செயலாளர், பணியாளர்கள்.

(C-20856)

---


**லஷ்சுமி** இணுவில்

கன்னுக்கு கண்ணாக

காட்சிகள்: 10.30, 2.30 (பழைய நேரம்)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

அஜித், ஜோதிகா நடித்த

**பூவெல்லாம் உன் வாசம்**

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

**நாகம்ஸ்** கன்னாகம்

விஜயகாந்த் (இருவேடம்), சௌந்தர்யா, வடிவேல், வடிவுக்கரசி நடித்த

**தவசி**

காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)


---

### பிற்போடப்பட்டுள்ளது

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை முன்னாள் அதிபர் அமரர் இராசையா கந்தையா அவர்களின் மாட்சிநயப்பு அஞ்சலிக் கூட்டம் 03.03.2002 ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

*ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை,*
*கொக்குவில்.* (1035) - மாட்சிநயப்புக் குழு.

---


### மீண்டும் ஜோ. எகட்டன்
**செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்**

ஸ்தாபனத்தின் விநியோகத்தில் 70 வருட பழமை வாய்ந்த

**தோலகட்டித் தயாரிப்புகள்**

தோலகட்டி நெல்லிரசம், முந்திரிகை ரசம்

குடாநாட்டில் மொத்த விலையில் பெற்றுக்கொள்ள:

ஜோயகோரா ஸ்ரோர்ஸ் - விநாயகர் களஞ்சியம்
பஸ் நிலையம், பருத்தித்துறை. பெற்றோல் நிலையம் அருகில், பிரதான வீதி, நெல்லியடி.

- வியாபாரிகள், வாடிக்கையாளர்கள் தொடர்புகொள்ளவும்.
- மேலும் வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

சந்தைப்படுத்துவோர்:

ஜோ-எகட்டன்

செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்,
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(1031)


---

### கண்ணீர் அஞ்சலி
### அமரர் கதிர்த்தம்பி தங்கராஜா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் **பண்டிதர் கதிர்த்தம்பி தங்கராஜா** அவர்கள் 05.02.2002 அன்று சிவபதமடைந்ததையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்..

நண்பர்கள்:
ஓய்வுபெற்ற ஆசிரியர் - வ.நாகராஜா
ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - இ.சுப்பிரமணியம்

(C-20857)

---

வரையறுக்கப்பட்ட

### நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம்
### அறிவித்தல்

**1993/94 நிதியாண்டுக்கான கூட்டுறவு கிராமிய வங்கி மீதிகளை உறுதிசெய்தல்**

1993/94 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அங்கத்தவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தாங்களின் மேற்படி காலத்திற்கான சேமிப்புப் புத்தகங்கள், ஏனைய ஆவணங்களை 2002.03.08 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுறவு கிராமிய வங்கியில் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொது முகாமையாளர்,
நெடுந்தீவு பல நோ.கூ.சங்கம்,
நெடுந்தீவு.
2002.02.21 (C-20853)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 01.11.1939 — உதிர்வு 24.01.2002



### அமரர் பாவிலு அருளப்பு

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீரே!
உங்கள் ஆசைமுகத்தை மறக்க முடியாது!!

எமது குடும்பத் தலைவரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் எம் துக்கத்தில் பங்குகொண்டும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிகள்புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (2002.02.23) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை விருந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

*பாரதிபுரம்,*
*பரமன்கணை, திருநெல்வேலி.* (1037)

---

### மரண அறிவித்தல்
### நாகலிங்கம் சுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் 18.02.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - சவுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார், கலைச்செல்வி (கமநல கேந்திர நிலையம், உடுவில்), சதீஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கரத்தினம், வள்ளியம்மை, தம்பித்துரை, தெய்வேந்திரம், தருமராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசமணி, சண்முகம்பிள்ளை, நடராசா, காலஞ்சென்ற செல்லப்பாபிள்ளை, வேலாயுதபிள்ளை (கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.02.2002 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (1028)

தகவல்:
- குடும்பத்தினர்.

---

### நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

**முதலாம் ஆண்டு** — **பத்தொன்பதாம் ஆண்டு**



**சின்னத்தம்பி முத்துத்தம்பி**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி)



**திருமதி மனோன்மணி முத்துத்தம்பி**
(ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி, 1953 - 1983)

**25.02.2001 அமரத்துவம் 23.03.1983**

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்களை எம்மால் மறக்க முடியவில்லையே!

**என்றும் நீங்காத நினைவுகளுடன் வாழும்:**

*77, அரச வீதி, நல்லூர்.* (1027) - பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

# படையினர் தொடர்ந்தும் உஷாராக இருக்க வேண்டும்

## வவுனியாவில் பிரதமர் தெரிவிப்பு

வவுனியா,பெப்.23

யுத்தநிறுத்தம் குறித்து மக்கள் மத்தியில் முழுநம்பிக்கை காணப்படவில்லை. அதேபோன்று விடுதலைப் புலிகள் மத்தியிலும் நம்பிக்கை காணப்படவில்லை. எனவே படை அதிகாரிகளைத் தொடர்ந்தும் உஷார் நிலையில் இருக்குமாறு உத்தரவிடுகின்றேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்த பிரதமர், வவுனியா இராணுவ முகாமில் முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் படையினர் மத்தியில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

அனைத்து சமூகத்தவர்களுக்கும் நியாயமான - நிரந்தரமான - சமாதானம் கிடைப்பதற்கான பயணம் மிகவும் கடினமானதாகும். எனினும் அந்தப் பயணத்தை நிறைவுசெய்ய அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். இதற்கு சகல தரப்பினரும் ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

இன்று எட்டப்பட்டுள்ள உடன்பாட்டின் முக்கிய நோக்கம், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதும் வடக்கு - கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை இடுவதும்தான். இந்த உடன்பாட்டில் உள்ள விடயங்கள் ஒவ்வொரு மாதமும் மறுபரிசீலனை செய்யப்படும்.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் நோர்வேயிடம் கோரிக்கைகளை சமர்ப்பித்தன. இருதரப்பு கோரிக்கைகளையும் ஆராய்ந்து நோர்வே தனது நிபந்தனைகளையும் உள்ளடக்கி உடன்பாட்டைத் தயாரித்துள்ளது.

சகல பயங்கரவாத நடவடிக்கைகள்போன்று இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துவது, வான்வெளித் தாக்குதல்களை நடத்தாமல் இருப்பது, கப்பம் கேட்காமல் இருப்பது என்பன உடன்பாட்டில் உள்ள சில நிபந்தனைகளாகும்.

பிரதேச ஒருமைப்பாட்டுக்கு விரோதமான செயல்களைத் தடுப்பது, நாட்டுக்குள் சட்டவிரோதமான ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பது ஆகியவற்றில் பூரண அதிகாரம் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏ-9 பாதை திறத்தல், புலிகள் நிராயுதபாணிகளாக நாட்டின் எந்தப் பகுதிக்கும்செல்ல அனுமதித்தல் ஆகிய விடயங்களும் உடன்பாட்டில் இடம்பெற்றுள்ளன - என்றார் பிரதமர். (ஐ-3)

# இந்தியாவும், அமெரிக்காவும் போர் நிறுத்தத்தை வரவேற்பு

கொழும்பு,பெப்.23

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டை இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள் வரவேற்றுள்ளன.

இந்திய வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வுகாண வாய்ப்பு ஒன்று தற்சமயம் கிட்டியுள்ளது. இதைப் பயன்படுத்தி இலங்கையின் சகல மக்களும் தமது அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும். இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒற்றுமை ஆகியவற்றுக்கு உட்பட்டதாகத் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியா தொடர்ந்து தனது ஆதரவை வழங்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் சார்பில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள செய்தியில் -

கடந்த டிசெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்தம் சமாதானப்பேச்சை இலக்காகக்கொண்டு நிரந்தர யுத்தநிறுத்தமாக்கப்பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் இதை வரவேற்கிறோம். நோர்வேயின் முயற்சி தொடர உறுதியான ஆதரவை வழங்குவோம். தமிழ்மக்களின் உரிமைகளை மதித்து நாட்டைப் பிளவுபடுத்தாமல் விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்பட்டால் தீர்வு சாத்தியமாகும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மகிழ்வோடு வரவேற்பதாகத் தெரிவித்த பிரிட்டிஷ் வெளிவிவகார துணை அமைச்சர் பென் பிராட்ஷோ, இலங்கையில் சமாதானம் ஏற்பட பிரிட்டன் ஒத்துழைப்பை நல்கும் என்றார். (ஐ-3-4)

# சதுரங்க சுற்றுப்போட்டி - 2002

இலங்கை லியோ கழகத்தின் பிரதேசம் IV இனால்

பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க சுற்றுப்போட்டி எதிர்வரும் 02.03.2002 முதல் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டியானது -

*அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டி*

* ஆண்கள் பிரிவு

* பெண்கள் பிரிவு

ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக அமையும் இச்சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் **28.02.2002** ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ம.மகேந்திரன்,
*சுதுமலைச் சந்தி,*
*மானிப்பாய்.*

(1034)

*அனுசரணை:* **Colonial Electrical Equipment, Colombo.**
*Phone: 384594, 384595.*


கணனிகள் விற்பனையில்



**Pentium 4 (1.6,1.7 GHz)**
**PentiumIII 933, 1000 MHz**

PRINTERS : EPSON LQ 300+, EPSON LX 300+
HP 1200 LASER, HP 640C,
SCANNER: HP 3300, ACER UPS : APC 500VA

கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No : 2831


## முழு விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு,பெப்.23

வவுனியா ரம்பைக்குளத்தில் உள்ள புளொட் அமைப்பின் முகாமில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் தொடர்பாக முழு விசாரணை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருக்கிறார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்க விசேட விசாரணைக்குழு ஒன்று ஏற்கனவே வவுனியா சென்றுள்ளது.

இத்தாக்குதல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வவுனியா விஜயத்தைக் குழப்பும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டதா என்பது பற்றியும் விசாரணையில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அத்தியாவசிய சேவை அலுவலகம் மூடப்படும்

கொழும்பு,பெப்.23

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தை மூடிவிட ஜனாதிபதி முடிவு செய்திருப்பதாக இணையச் செய்தித்தளம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

மார்ச் 15ஆம் திகதி முதல் இநத அலுவலகம் மூடப்பட்டு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பதவி இல்லாமற் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் கையாளப்பட்டு வருவதை அடுத்தே இந்த அலுவலகம் மூடப்படுகிறது. (ஐ)

## இன்று நள்ளிரவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 3 மணியளவில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றஸன் இந்தப் பிரகடனத்தை வெளியிட்டார்.

### அறிக்கையின் சாராம்சம்

பிரகடனத்தை ஒஸ்லோவில் வெளியிட்ட நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றஸன் அப்போது விடுத்த அறிக்கையின் சாரம் வருமாறு:-

அரசு - புலிகள் இரு தரப்பினரும் அரசியல் தீர்வை நோக்கிய நீண்ட பாதையில் இறங்கியிருக்கின்றனர். இந்தப் பயணம் சுலபமான ஒன்றல்ல. அதை எதிர்கொள்ள உறுதியும், ஊக்கமும் தேவைப்படும்.

இரு தரப்பு உடன்பாடு அவர்கள் சமாதானத்தை நோக்கிய நடவடிக்கைகளைப் புத்துணர்வுடன் முன்னெடுத்திருக்கிறார்கள் என்ற தகவலைத் தந்திருக்கிறது.

நிரந்தர யுத்தநிறுத்த உடன்படிக்கையில் முக்கியமாக மூன்று அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்று: யுத்தநிறுத்த நடைமுறையின் பிரகாரம் சகல தாக்குதல்கள், மோதல்கள் ஆகியவை நிறுத்தப்படும். இருதரப்பிலும் நிராயுதபாணிகளின் நடமாட்டத்துக்குச் சுதந்திரமளிக்கப்படும்.

இரண்டு: பொதுமக்களின் வாழ்வியல் நடவடிக்கைகள் இழுபறிகள் இல்லாத இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்படும். இதன் பிரகாரம் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படும். இராணுவப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் ஒழுங்காக மக்களுக்கு விநியோகிக்கப்படும். மீன்பிடிக் கட்டுப்பாடுகள் படிப்படியாக நீக்கப்படும்.

மூன்று: நோர்வே தலைமையிலான சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் குழு இரு தரப்பினரும் பொறுப்பாக நடந்துகொள்கிறார்களா என்பதைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து வரும். (ஐ-3-4)

## அரசமைப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையற்றதும், ஜனநாயக நீதியற்றதுமான செயல்கள் ஆகும்.

- இவ்வாறு ஜனாதிபதி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3-4)


ஒறிஜினல் CD வெளியீடு

❊ கன்னத்தில் முத்தமிட்டால்

❊ சார்லி சாப்ளின்

அல்டி எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம்.

(C20859)


### ஓமந்தைப் பகுதியில் நேற்று

# புலிகளின் எல்லை வரை பிரதமர் சென்றுபார்த்தார்!

வவுனியா,பெப்.23

நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஏ-9 கண்டி வீதி ஊடான பொது மக்களின் போக்குவரத்தை நேரில் பார்வையிட்டார்.

ஓமந்தைப் பகுதிக்குச் சென்ற பிரதமருக்கு அங்கு தமிழர் மரபுகளுக்கு அமைய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் எல்லையில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சமீபமாக - உள்ள விளக்குவைத்தகுளம் சோதனை நிலையம்வரை பிரதமர் சென்றுபார்வையிட்டார்.

பின்னர் வவுனியா செயலகத்தில் வைத்து தாம் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதியை நோர்வேத் தூதரிடம் பிரதமர் கையளித்தார்.

பிரதமருடன் அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, ஜயலத் ஜயவர்த்தன, திலக்மாரப்பன ஆகியோரும் வவுனியாவுக்கு வந்திருந்தனர். வவுனியா செயலகத்தில் நடந்த வைபவத்தில் எம்.பிக்களான சித்தார்த்தன், சிவசக்தி ஆனந்தன், இராஜ புவனேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முப்படைத் தளபதிகளும் றொகான் தளுவத்தையும் வவுனியா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சூல செனிவிரத்னவும் பிரசன்னமாக இருந்தனர். பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சமுகமளிக்கவில்லை. உடன்படிக்கைப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டதை அடுத்து வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் கேள்விகளைத் தொடுத்தனர். ஞாயிறன்று கொழும்பில் விசேட பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்துகிறேன். அம்மாநாட்டில் எந்தக் கேள்வியும் கேட்கலாம்! அவற்றுக்குப் பதிலளிக்கப்படும் என்று பிரதமர் ரணில் சொன்னார். முல்லைத்தீவுக் கடலில் நடந்த மோதல் சம்பவம் குறித்தும் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த பிரதமர், புதிய உடன்படிக்கையின் மூலம் சந்தேகத்துக்கு இடமான படகுகள், குழுக்களைக் கட்டுப்படுத்த முடிந்த அளவு செயற்படுமாறு முப்படைகளுக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார். எதிர்காலத்திலும் அது அவ்வாறே நடைபெறும் என்றும் சொன்னார்.

முன்னதாக -

பிரதமர் நேற்று முற்பகல் விசேட ஹெலிகொப்டர் மூலம் வவுனியாவின் ஜோசப் தளத்தில் வந்து இறங்கினார். அவரைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோர் வேறு ஹெலிகொப்டரில் வந்தனர். ஜோசப் படைத்தளத்தில் பாதுகாப்புத் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றது. பின்னர் ஓமந்தை முன்னரங்குக் காவல்நிலையம் அமைந்துள்ள விளக்குவைத்தகுளம் பகுதிக்குப் பிரதமர் சென்றார்.

ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதி மக்களின் நிலைமையை ஆராய்ந்த பிரதமர், பிற்பகல் 2.45 மணியளவில் வவுனியா செயலகம் சென்றார். (ஐ-3-4)

# கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி ம.கார்த்திகாயினியின் அன்புத் தந்தை

## அமரர் கந்தசாமி மகாலிங்கம்

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருடன் நாமும் துயரினைப் பகிர்ந்துகொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் வருட வணிகத்துறை மாணவர்கள்,
*முகாமைக் கற்கைகள் வணிக பீடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

குறிப்பு: இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2002) நடைபெறவிருப்பதால் அதில் கலந்துகொள்வதற்காக அனைத்து 2ஆம் வருட வணிகத்துறை மாணவர்களையும் முற்பகல் 11.30 மணிக்கு மாணவர் பொது அறையில் ஒன்றுகூடும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (1039)

# 31ஆம் நாள் நினைவுத் திருப்பலி

24-02-2002

பிறப்பு 29 - 05 - 1922



இறப்பு 25 - 01 - 2002

## திருமதி மேரி இராசமணி மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை)

கரவெட்டியில் பிறந்து வன்னி மண்ணில் இறைபதமடைந்த எம் அம்மாவுக்காகச் செபித்த, அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எம் நன்றிகள். எம் அம்மாவின் நினைவாக அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் நாளை (24.02.2002) ஞாயிறு முற்பகல் 11.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்க குருக்கள், துறவியர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மகிழ்வோடு அழைக்கின்றோம்.

அருட்திரு. ம.சே.கருணாரத்தினம், பங்குத்தந்தை, மல்லாவி.

அருட்திரு. ம.பெ.ஞானரத்தினம், பங்குத்தந்தை, அளவெட்டி - பண்டத்தரிப்பு.

(1001)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.